# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 23 இதழ் – 8 ஆகஸ்ட் 2010

தனிப் பிரதி ரூ. 8/-




கிறிஸ்துவின் சபை

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

# BIBLE MEDITATION

## TV PROGRAM




## ஆசானின் அறிவுரையில்...

1. ஆசிரியர் உரை ........ 1
2. நாம் ஏன் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறோம்? ........ 11
3. பெண்கள் பகுதி ........ 17
4. வாலிபர் பகுதி ........ 20
5. சிறுவர் பகுதி ........ 23
6. பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல் ........ 25
7. ஆவிக்குரிய வாழ்விற்கான அளவுகோலை ஏற்படுத்துகிறது யார்? ........ 29
8. இயேசுவும், சிலுவையும் ........ 31

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 23 AUGUST - 2010 Issue - 8


ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்!! பங்கு பெறுங்கள் !!!

## காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்

எக்லீசியா வேதாகமக் கல்லூரியும் இணைந்து நடத்தும்

# பதிமூன்றாம் வேதாகம கருத்தரங்கம்

# THIRTEENTH ANNUAL BIBLE LECTURESHIP

நாள் : **அக்டோபர் 1,2 - 2010 (வெள்ளி, சனி)**

நேரம் : **வெள்ளி காலை 9:00 - மாலை 4:30 மணி**

**சனி காலை 9:00 - மதியம் 12:30 மணி**

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

கருப்பொருள் : **"கிறிஸ்துவின் சுவிசேஷம்"**

❀ வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.

❀ தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனி இடவசதி உண்டு.

**தொடர்பு முகவரி**


**கிறிஸ்துவின் சபை**

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH. : 04257 - 230030

Cell : 98427 - 30382

99655 - 30385

ஆசிரியர் உரை

# பினெகாஸ்

மனித இனமான சகல ஜனங்களையும் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணின தேவாதி தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை (அப் 10:34; ரோமர் 2:11) என்கிற அப்பட்டமான உண்மையைப் பகிரங் கமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய மனிதன், அத்தோடு கூட இன்னொரு உண்மையையும் ஒத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறான். அது, மனிதன் பட்சபாதம் உள்ளவன் என்பது. எந்த ஒரு மனிதனும் இதற்கு விதிவிலக்கு அல்ல என்பதை நாம் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லிவிட முடியும். எப்படியெனில், மனிதர்களுக்கிடை யில் காணப்படும் அன்பில் தலையாயதாகப் போற்றப்படுவது தாய் அன்பு. ஆனால், இந்தத் தாயன்பே கூட பல நேரங்களில் "பட்சபாதம்" என்ற நச்சுப் பாம்பால் தீண்டப்பட்டு விடுகிறதை நாம் சமுதாயத்தில் உள்ள குடும்பங்களில் கண் கூடாகப் பார்க்கிறோம். பட்சபாதம் இன்றி நடக்கும் காரியத்தில் மானிடம் பெலவீனமானது தான் என்பதற்கு வேதாகமமும் சான்று பகர்கிறது. ஆம், தன் இளம் வயதிலேயே போற்றத்தகும் பண்புகள் பல பெற்றிருந்த, முற்பிதாக்க ளில் ஒருவனாகிய ஈசாக்கின் மனைவி ரெபெக்காள், தான் காத்திருந்து ஆசையோடு பெற்றெடுத்த இரட்டைக் குழந்தைகளில் மூத்தவனா கிய ஏசாவைக் காட்டிலும், இளையவனாகிய யாக்கோபை அதிகமாக நேசித்து பட்சபாதத்தோடே நடந்து கொண்டாள் என்று பார்க்கிறோம் (ஆதி. 25:28).

"பட்சபாதம்" என்பது சமமாகப் பாவிக்க வேண்டியவைகளை அல்லது வேண்டியவர்களை அப்படிப் பாவிக்க மறுப்பது. ஒன்றுக்கு மன்றொன்றைப் பார்க்கிலும் கூடுதல் முக்கியத்துவம் கொடுப்பது. இத்தீமைக்குத் தன்னைத் தாரை வார்த்து விட்ட மனித சமுதாயம், இதைத் தன் ஜென்மீக வாழ்க்கையோடு நிறுத்திக் கொள்ளாமல் தன் ஆன்மீக வாழ்க்கையிலும் அட்டைபோல் ஒட்டிக்கொள்ள அனுமதி கொடுத்து விட்டது. கிறிஸ்தவமும் இதற்கு விதிவிலக்காக இல்லை என்பது கூடுதல் வேதனை. எப்படியெனில், பரலோக தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, வேத வசனங்களால் வெகுவாக மெச்சப்பட்டி ருக்கும் தேவ மனிதர்களைக் கிறிஸ்தவம் ஏக பார்வையில் பார்க்கா மல், அவர்களில் சிலருடைய மேம்பட்ட பக்தி வாழ்க்கையை துச்ச மென நினைத்து, அவர்களின் பக்திப் பண்புகளுக்கு உரிய மரியாதை கொடுக்காமல் சுத்தமாக ஒதுக்கி வைத்து விடுகிறது. அப்படியில்லா விட்டால் தேவன் போற்றியவர்களை நாம் காலமெல்லாம் கவனிக் காமல் ஒதுக்கி வைப்போமா?

மெய்த் தேவனையும், பரிசுத்த வேதாகமத்தையும் நாங்கள் நேசிக்கிறோம் என்பவர்களின் இந்நிலை வியப்புக்குரியதாக மாத்திரம் இல்லாமல் நகைப்புக்குரியதாகவும் உள்ளது. இப்படி சர்வ வல்ல தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களிடம் காணப்படும் இந்த அநியாயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று விரும்பி,

கடந்த 16 ஆண்டுகளாக, ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில், வேதாகமத்தின் பக்கங்களைத் தேடி பரலோக தேவனால் போற்றப் பட்டவர்களை அடையாளம் கண்டு, அந்த உத்தம புத்திரர்களின் பக்திப் பண்புகளைப் பட்டை தீட்டி, திருமறை ஆசானின் பக்கங்களில் அவர் களை அண்ணாந்து பார்க்கும்படி செய்து வருகிறேன். இப்படிப்பட்ட வர்களெல்லாம் வேதாகமத்தில் இருக்கிறார்களா என்பது இதைப் படிக்கும் வரைக்கும் எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை என்று நீங்க ளும் வியந்து பாராட்டியிருக்கிறீர்கள். இச்சீர்மிகு வரிசையில் இவ்வருடம் இடம் பிடித்து, ஆசானின் பக்கங்களில் எழும்பி நிற்கும்படி யாய் பதுங்கி நிற்பவன் பினெகாஸ். இவன் எந்தளவு எழும்பி நின்று நமக்குப் பாடம் கற்றுக் கொடுக்கப் போகிறான் என்று கவனமாகப் பார்ப்போம்.

அதற்கு முன்பாக, ஆசானின் குடும்பத்தாராகிய நம்முடைய வழக்கத்தின்படியாக இந்த பினெகாஸ் பற்றிய பின்னணி குறித்துப் பார்த்து விடுவோம்.

இவ்வருடம் நம்முடைய பார்வையில் பட்ட பினெகாஸ், இஸ்ரவேலர் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த நாட்களில் வாழ்ந் தவன். மோசேயின் சகோதரனாகிய ஆரோனின் மகன் வழிப் பேரன் (எண் 25:7). பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ள மூன்று பினெகாஸ் களில் இவன் முக்கியமானவன் (எண் 25 அதி). அடுத்த பினெகாஸ், நியாயாதிபதிகளின் காலத்தில் சீர்கெட்டு வாழ்ந்த ஏலியின் குமாரர்க ளில் ஒருவன் (1 சாமு. 1:3). இன்னொருவன் எஸ்றாவின் நாட்களில் வாழ்ந்தவன் (எஸ்றா 8:33) நம்முடைய பினெகாஸ் தேவனுடைய பார்வையில் சிறப்புக்குரியவனாக மாறுவதற்கான சம்பவம் எந்தச் சூழ்நிலையில் நடந்ததென்று இங்கே தெரிந்து கொள்வது அவசியம்.

எண்ணாகமத்தின் காலத்தில் பேயோரின் குமாரனாகிய பிலேயாம் என்ற ஒரு திருட்டுத் தீர்க்கதரிசி இருந்தான். இவன் நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்த மெசொப்பொத்தாமியா விலிருந்து கூலி பேசி அழைக்கப்பட்டவன் (உபா. 23:4). அடிப்படை யில் இவன் குறி சொல்லுகிற வேலையைச் செய்து கொண்டிருந்தவன் (எண். 22:7). உலக சரித்திரத்திலேயே வைத்து ஒரு மிருகத்தால் கண்டிக் கப்பட்ட ஒரே மனிதன் இவனே. (எண். 22: 22-35). இவன் கர்த்தர் கர்த்தர் என்று பல சந்தர்ப்பங்களில் தன் வாயைத் திறந்து சொல்லி யிருந்தாலும், நம் நாட்களில் உள்ள பொய்த்தீர்க்கதரிசிகள் போல், கர்த்தருக்கு எதிராகச் செயல்பட்டவன். தீர்க்கதரிசி என்ற வார்த்தை இவனுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், வேதாகமத்தின் எந்த ஒரு பகுதியும் இவனை மெச்சி ஒரு வார்த்தை பேசுவதில்லை. (II பேது. 2:15-16; யூதா 11). அநீதிமானாக நடந்து கொண்டு, நீதிமானென்று மரிக்க ஆசைப்பட்ட ஒரு பக்திப் பயங்கரவாதி இவன். (எண். 23:10). பின்னாளில் இஸ்ரவேலர்களால் யுத்தத்தில் வெட்டி சாய்க்கப்பட்டான் (31:8).

வனாந்திர யாத்திரையின் போது, மோவாபின் ராஜாவாகிய பாலாக், ஏராளமாய் பரவிக் கிடந்த இஸ்ரவேலர்களினிமித்தம் பயம டைந்து, இஸ்ரவேலைச் சபிக்கும்படி இந்த பிலேயாமை கூலிக்காக அழைத்தான் (எண். 22:6,11;23:7,27). ஆனால், மோவாபின் ராஜா கேட்டுக் கொண்டதற்கு மாறாக, அவர்களைச் சபிக்காமல் ஒவ்வொரு

முறையும் அவர்களை ஆசீர்வதித்தான் (எண். 23:11). அவன் கடைசியாகச் சொன்ன தீர்க்கதரிசனம் (எண். 24:17-19), வரப்போகும் மேசியா பற்றிய தீர்க்கதரிசனமாக இருந்தாலும், இதன் பொருள் தெரியாதபடியால், மோவாபின் ராஜாவுக்கு முன்பிருந்ததை விட இஸ்ரவேலர் பற்றிய கலக்கம் அதிகரித்தது. அதினிமித்தம் பாலாக், பிலேயாம் இவர்களின் தேவ விரோதக்கூட்டு மேலும் தொடர்ந்தது.

எப்படியெனில், எண்ணாகமம் 24-ன் கடைசி வசனமான 25 ல், "பின்பு பிலேயாம் எழுந்து புறப்பட்டு, தன் இடத்திற்குத் திரும்பினான்; பாலாகும் தன் வழியே போனான்" என்று சொல்லப்பட்டிருப்பது இவர்களின் தீமைக் கூட்டணி முறிந்தது போல் தெரிந்தாலும் அதற்கு மாறாகக் காரியங்கள் நடந்ததாகவே தெரிகிறது. ஏனெனில், 25 ஆம் அதிகாரத்தின் முதல் வசனத்தில் காணப்படும் மோவாபின் குமாரத்திகளுடனான இஸ்ரவேலர்களின் வேசித்தனத்திற்கு, இவர்களின் கைங்காரியமே காரணம் என்று ஆவியானவர் வேதாகமத்தின் பிற பகுதிகளில் அம்பலப்படுத்தியுள்ளார். ஆம், எண். 31:16, "*பேயோரின் சங்கதியிலே பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணக் காரணமாயிருந்தவர்கள் இவர்கள் தானே. அதனால் கர்த்தரின் சபையிலே வாதையும் நேரிட்டதே*" என்றும், வெகு காலத்திற்குப் பிறகு, யோவான் அப்போஸ்தலனைக் கொண்டு, பெர்கமு சபையாருக்கு எழுதும் போது, "*ஆகிலும், சில காரியங்களைக் குறித்து உன் பேரில் எனக்குக் குறை உண்டு. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு*" (வெளி. 2:14) என்றும் ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இது இவர்கள் தங்கள் மதியால் செய்ய முடியாததைக் கூட்டுச் சதியால் செய்து விட்டதாகவே தெரிகிறது. ஆம், பிலேயாமின் "சாபமான" வார்த்தை களால் இஸ்ரவேலைத் தோற்கடிக்க முடியாவிட்டாலும், தேவனுடைய "சாபமும், கோபமும்" இஸ்ரவேல் மீது வரும்படியான காரியத்தில் வெற்றி பெற்றுவிட்டனர். எப்படியெனில், இஸ்ரவேலர், மோவாபின் குமாரத் திகளோடே வேசித்தனம் பண்ணி, அவர்களுடைய தேவனுக்கு இட்ட பலிகளை விருந்தாக உண்டு, பாகால் பேயோரைப் பற்றிக் கொண்டபடியால், "கர்த்தருடைய கோபம்" இஸ்ரவேல் மேல் மூண்டது (எண். 25:1-3). இதனிமித்தம் தன் தாசனாகிய மோசேக்கு தேவன் கடுமையான கட்டளை கொடுத்தார். "*... கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலை விட்டு நீங்கும்படி நீ ஜனங்களின் தலைவன் எல்லாரையும் கூட்டிக்கொண்டு அப்படிச் செய்தவர்களைச் சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப் போடும்படி செய் என்றார்*" (எண். 25:3,4). அப்படிப்பட்டவர்கள் சூரியனுக்கு எதிரே, கர்த்தருக்கு முன்பாகத் தொங்க வேண்டுமாம். அவிசுவாசத்தையும், துரோகத்தை யும் தேவனுக்கெதிரான கலகத்தையும் தேவன் ஒரு போதும் சகிக்க மாட்டார் என்பது எல்லோருக்கும் தெரிய வேண்டுமாம். பயமாக இல்லையா?

அங்கே, வேசித்தன பாவத்தையும், அந்நிய தேவர்களை அங்கீ கரித்த பாவத்தையும் செய்தவர்களுக்கு தேவன் இட்ட கட்டளையை நினைத்து மோசேயும், சபையாரும் செய்வதறியாது கலங்கி, கண்ணீரும், கம்பலையுமாக நிற்கும் போது, அதே வேசித்தன பாவத்தை நடப்பிக்கும் படியாய் இவர்கள் கண்களுக்கு எதிரே ஒரு மோவாபியப் பெண்ணை தன் சகோதரனுக்காக ஓர் இஸ்ரவேலன் அழைத்துக் கொண்டு வந்தான் (எண் 25:6). ஏற்கனவே, தூக்கில் போடப்பட்டும், வாதையால் நொந்தும் ஜனங்கள் மாண்டு கொண்டிருக்கும் போது, மீண்டும் அதே தவறு பகிரங்கமாக நடப்ப தைக் கண்ட நம்முடைய பினெகாஸ், தனக்கு இது பற்றி யாரும் கட்டளை கொடுக்காத நிலையில், தனக்கு இப்படிச் செயல்பட எந்த அதிகாரமும், பொறுப்பும் இல்லாதிருந்தும் கர்த்தருக்காகத் தான் செயல்படத் தீர்மானித்தான். "அந்த அருவருப்பான காட்சியை ஆரோனின் குமாரனாகிய எலெயாசரின் மகன் பினெகாஸ் கண்ட போது, அவன் நடுச்சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து, இஸ்ரவேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம் பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய் இஸ்ரவேல் மனிதனும், அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப் போட்டான். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்று போயிற்று" (25:7-8).

இது குறித்து உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? இப்படிச் செயல்பட எவ்வளவு துணிவும், அஞ்சாமையும், வைராக்கிய மும் தேவை என்று. அதுவும் வேசித்தனத்திலே ஈடுபட்ட இஸ்ரவே லனாகிய சிம்ரியும், கஸ்பியாகிய மோவாபியப் பெண்ணும் முக்கியப் புள்ளிகள். சிம்ரி சிமியோனின் கோத்திரத்துப் பிரபு. கஸ்பி ஒரு தலை வனுடைய மகள். முக்கிய புள்ளிகள் மீது நியாயத்தினடிப்படையில் கை வைத்தாலும் என்ன நடக்கிறது என்பதை நாம் பார்த்துக் கொண்டு தானிருக்கிறோம். ஆனால், பினெகாஸ் அது பற்றியெல்லாம் கவலைப்படவில்லை.

பினெகாசின் இந்த பக்தி செயல்பாட்டிற்கு, பரலோகத்தின் தேவன் தன் அங்கீகாரத்தை உடனடியாகக் கொடுத்தார். கர்த்தர் மோசேயை நோக்கி, "*நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசரின் மகன் பினெகாஸ், என்னிமித்தம் அவர்கள் நடுவில் பக்தி வைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர்மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான். ஆகையால், இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடு கிறேன். அவன் தன் தேவனுக்காகப் பக்தி வைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால், அவனுக்கும், அவனுக்குப் பின் வரும் அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரியப்பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்*" (எண். 25:10-13).

அருமையானவர்களே, தேவன் யாருக்கு ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் இங்கே கொடுக்கிறார் என்று பாருங்கள். மோசே

யோடு அங்கே நூற்றுக்கணக்கில் நின்று அழுது கொண்டிருந்த சபையார் எல்லாருக்கும் ஆசீர்வாதத்தைக் கொடுக்காமல், கர்த்தருக்காகத் துணிந்து செயல்பட்ட பினெகாசுக்கே ஆசீர்வாதத்தையும், சமாதானத் தையும் கொடுத்தார். ஆசீர்வாதமும், சமாதானமும் ஒருவனுக்குப் போகிற போக்கில் கிடைத்து விடும் என்று நினைப்போமானால் நிச்சய மாகவே ஏமாந்து போவோம்!

சரி, இப்பொழுது, இந்த பினெகாஸ் மூலம் எப்படிப்பட்ட பாடங்கள் நமக்குக் கிடைக்கிறதென்று கவனிப்போம்.

## 1. பினெகாஸ் பக்தியில் வைராக்கியம் காட்டினான் (25:13)

ஆரோனின் குமாரனான எலெயாசரின் மகன் பினெகாஸ் நமக்குக் கற்றுக் கொடுக்கும் முதல் பாடம், நாம் பக்தியில் வைராக்கி யம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது.

பக்தி வைராக்கியம் சம்பந்தமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முதல் காரியம், “பக்தி” என்பது வேறு, “பக்தி வைராக்கி யம்” என்பது வேறு. நாத்திகர்களாக இல்லாமல் தங்களை ஆத்திகர் கள் என்று சொல்லிக் கொள்கிற எல்லோரிடமும் ஒருவிதமான பக்தி காணப்படுகிறது. அப்படி காணப்படுகிறபடியால் தான், ஏதாவது ஒரு வகையிலான மதக் காரியங்களில் தங்களை ஈடுபடுத்துகிறார்கள். இப்படிப்பட்ட பக்தி மாத்திரம் ஒருவனுக்கு ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் பெற்று தந்து விடாது. அப்படித் தருமானால், அங்கே, மோசேயோடு நின்று பக்தியுணர்வோடு அழுது கொண்டி ருந்த அனைவருக்கும் தேவன் ஆசீர்வாதத்தைத் தந்திருக்க வேண்டும் தானே. அப்படியில்லையே!

அப்போஸ்தலன் பவுலடியார் தீத்துவுக்கு எழுதும் போது, அவ பக்தியுடையவர்களாக இல்லாமல் தேவபக்தியுடையவர்களாக இருக்க வேண்டுமென்று எடுத்துரைக்கிறார் (தீத்து. 2:12). இதே பவுல டியார், ரோமாபுரியாருக்குக் கூறும் போது, அந்த தேவ பக்தி வைராக் கியமானதாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார். “தேவ னைப் பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக் குறித்து சாட்சி சொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுய நீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவ நீதிக்குக் கீழ்ப்படியாமலிருக்கிறார்கள் (ரோம. 10:2,3) என்று. மேற்காணும் வசனங்களை நாம் கவனித்தால், தேவனைப் பிரியப்படுத்த விரும்பும் ஒருவனுக்கு பக்தியும், அதோடு கூட பகுத்தறிவையும், தேவநீதியை யும் அடிப்படையாகக் கொண்ட பக்தி வைராக்கியமும் தேவை என்று பார்க்கிறோம். இப்படிப்பட்ட பக்தி வைராக்கியம் தான் பினெகாசிடம் காணப்பட்டுள்ளது. அப்படியானால், சுற்றிலும் இருப்பவர்கள் எப்படி யிருந்தாலும், தன்னுடைய பக்தி, தேவநீதியை நிறைவேற்றுவதற்கான அறிவுப்பூர்வமான, அதாவது, காரண் காரியங்களை ஆதாரமாகக் கொண்ட பக்தியாக இருக்க வேண்டுமென்பதையும், இப்படிப்பட்ட தேவ பக்தியைத் தான் தேவன் எதிர்பார்க்கிறார் என்பதையும் இவன் எப்படித் தெரிந்து கொண்டான்? இரண்டு காரணங்கள் நமக்குத்

தெரிகிறது. ஒன்று, தன் தகப்பனோடு பிறந்த நாதாபும், அபியுவும் பக்தி வைராக்கியம் காட்டாததால் என்ன நடந்ததென்று (லேவி. 10:1,2). இவனுக்கு போதிக்கப்பட்டிருந்திருக்கும். மற்றொன்று, தன் தாத்தாவாகிய ஆரோன், சீனாய் மலை அருகில் பக்தி வைராக்கியம் காட்டாததால் என்ன நடந்தது என்பதும் (யாத். 32-ம் அதி) இவனுக்குச் சொல்லப்பட்டிருந்திருக்கும். இவைகளைக் கொண்டு தன் பக்தியை இவன் புடம் போட்டு வைத்திருந்தபடியினாலே, தன்னுடைய பக்தி வைராக்கியத்தைக் காட்டும்படியான நேரம் வந்த போது, அவனால் நொடிப்பொழுதில் செயல்பட முடிந்தது.

அன்பானவர்களே, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பக்தி வைராக்கியத்தில் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? பினெகாஸ் தன் பக்தியில் வளர்ந்து தன்னை வைராக்கியமுள்ளவனாக மாற்றிக் கொள்வதற்கு தனக்குக் கிடைத்த தேவ ஆலோசனைகளை அவன் அசட்டை செய்யாமல் ஏற்றுக் கொண்டான். இந்நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு பழைய, புதிய ஏற்பாடுகளில் எத்தனை தேவ ஆலோசனைகளும், முன்னுதாரணங்களும், எச்சரிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை எண்ணிப் பாருங்கள். பவுலடியார் ரோமருக்கு எழுதும் போது, "முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் 15:4). கொரிந்தியருக்குச் சொல்லும் போது, "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாகச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1 கொரி. 10:11) என்று கூறுகிறார்.

ஆனால், நாம் நம்முடைய பக்தி காரியங்களில் பினெகாஸ் போல செயல்படுகிறவர்களாக உள்ளோமா? அப்படியில்லையானால், நம்முடைய பக்தியை தேவ நீதியினடிப்படையில், அதாவது தேவன் வசனத்தில் சொல்லியிருப்பவைகளை மாத்திரம் செய்வோம் என்ற ரீதியில் அமைத்துக் கொண்டு, அந்த பக்திக்காகச் செயல்படவேண்டிய நேரத்தில், வைராக்கியமாக செயல்பட்டு, ஆசீர்வாதத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்வோம்.

## II. பினெகாஸ் பாவ நிவர்த்தி செய்தான் (வச. 13)

ஆரோனின் குமாரனான எலெயாசரின் மகன் பினெகாஸ் நமக்குக் கற்றுக் கொடுக்கும் அடுத்த பாடம், நாம் பாவ நிவிர்த்தி செய்கிறவர்களாயிருக்க வேண்டுமென்பது.

"பாவ நிவிர்த்தி" என்னும் சொற்றொடர் வேதாகமத்தில் இருக்கும் ஒரு முக்கியமான சொற்றொடர். "பாவ நிவிர்த்தி" என்றால் பாவத்தை நீக்குவது அல்லது அகற்றுவது. பாவத்தை நிவிர்த்தி செய்யக்கூடிய வல்லமை இரத்தத்திற்கு மாத்திரமே உண்டு (லேவி. 17:11; எபி. 9.22). இப்படி இரத்தம் செய்யக்கூடிய ஒரு செயலை பினெகாஸ் செய்துள்ளதாக தேவனே கூறுகிறார் (25:13). அவன் ஆசீர்வாதமும், சமாதானமும் பெற்றதற்கு காரணம் இதுதான்.

பினெகாஸ் செய்த ஒரு செயல் இரண்டு பெரிய நன்மைகளைக் கொண்டு வந்துள்ளது. 1. அருவருப்பான காரியத்தைச் செய்த இரண்டு பேரை பினெகாஸ் ஒரு சேரக் குத்தின உடனே இஸ்ரவேலில்

இருபத்து நான்காயிரம் பேர் மரிப்பதற்குக் காரணமாயிருந்த வாதை நின்று போனது (வச 8). 2. அவனுடைய வைராக்கியமான செயல்பாடு, தேவ கோபத்திற்குக் காரணமான பாவச்செயலை நிறுத்தியது. திருட்டுத் தீர்க்கதரிசியாகிய பிலேயாமின் தவறான போதகம் இஸ்ரவேலுக்குள்ளாகப் பாவத்தைக் கொண்டு வந்தது. அதே வேளையில், பக்திப் பித்தன் பினெகாசின் சரியான செயல் இஸ்ரவேலிலிருந்த அந்தப் பாவத்தை எடுத்துப் போட்டது. தனிப்பட்ட ஒரு மனிதனுடைய செயல் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று பாருங்கள். அப்படியானால், ஆன்மீக காரியங்களில் எவ்வளவு கவனமாக இருப்பது அவசியம் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

பினெகாஸ் இப்படியாகச் செயல்படுவதற்கு யாரும் அவனைத் தூண்டவில்லை. தேவனுக்கு விரோதமான செயலைக் கண்டு பொறுக்க மனதில்லாமல் தானாக செயல்பட்டு இஸ்ரவேலின் பாவத்தைத் துடைத்துப்போட்டான். இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும் இக்காரியத்தில் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? நம்முடைய செயல்பாடு நமக்கு ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் கொடுக்கத்தக்கதாக இருக்கிறதா? இல்லையா? அத்தோடு நம்முடைய செயல்பாடு பிறருடைய பாவங்களையும் எடுத்துப் போடத்தக்கதாக உள்ளதா? இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது என்று பார்க்கிறோம் (1 யோவா 1:7). இயேசுவின் இரத்தம் பிறருடைய பாவத்தை எடுத்துப் போடும் வல்லமை பெற்றிருந்தாலும், அந்த இரத்தம் பிறருடைய பாவத்தை எடுத்துப் போடுவதற்கு, அடுத்தவருடைய பக்தி செயல்பாடு தேவைப்படுகிறது. எனவேதான், எல்லோருடைய பாவங்களுக்காகவும் இரத்தம் சிந்தின இயேசுவானவர், தான் சிந்தின இரத்தத்தோடு உலக மக்கள் தொடர்பு கொள்ளும்படியாக, நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மத். 28:19,20) என்று தன்னுடைய சீடர்களுக்குக் கட்டளையிட்டார். தன்னுடைய இரத்தமே எல்லோருடைய பாவங்களையும் நேரிடையாக எடுத்துப் போடுகிறதாக இருந்தால், அங்கே பிரதான கட்டளையே அவசியப்பட்டிருக்காது. இயேசுவின் பிரதான கட்டளையை ஏற்று சீடர்கள் பக்தி வைராக்கியத்தோடு செயல்பட்டபடியால்தான் ஆயிரக்கணக்கானவர்கள் பாவ நிவிர்த்தி பெற்று கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள் (அப். 2:41).

அருமையானவர்களே, நாம் ஒவ்வொருவரும் பிறருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கு பினெகாஸ் போல் ஏதாவது ஒரு வகையில் செயல்படுகிறவர்களாக உள்ளோமா? அதுவும் தீவிரமாகவும், வைராக்கியமாகவும் செயல்படுகிறவர்களாக உள்ளோமா? ஆசீர்வாதமும், சமாதானமும் வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டு, பிறரின் பாவநிவிர்த்திக்காக நாம் பாடுபடாமலிருந்தால் அவை எப்படிக் கிடைக்கும்? இங்கே கவனியுங்கள், பிறரின் பாவச் செயல் அகற்றப்படுவதற்குக் காரணமான பினெகாஸ் தான் பாவமற்றவனாக இருந்து, பிறகு செயல்பட்டுள்ளான். அதுபோல, இந்த முயற்சியை எடுக்க விரும்பும் நாம் முதலாவது, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்ய, அதாவது, விசுவாசித்து (மாற்கு 16:16), மனந்திரும்பி (அப். 2:38),

இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (ரோம 10:10), பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற (அப். 22:16). நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். பிறகு, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் போல (அப். 8:4). இயேசுவின் இரத்தத்தோடு பிறரைத் தொடர்பு கொள்ளச் செய்து, அதன் மூலம் அவர்களும் பாவ நிவிர்த்தி பெற்றுக் கொள்ளும்படியான செயலைச் செய்ய வேண்டும். இப்படி நாம் செய்யும் போது, பினெகாசுக்குக் கிடைத்த ஆசீர்வாதமும், சமாதானமும் நமக்குக் கிடைக்கும்.

## III. பினெகாஸ் நித்திய ஆசாரிய பட்டத்திற்கு சொந்தமானான் (வச 13)

ஆரோனின் குமாரனான எலெயாசரின் மகன் பினெகாஸ் நமக்குக் கற்றுக் கொடுக்கும் இன்னுமொரு பாடம், நாம் நித்திய மான காரியங்களுக்குச் சொந்தமாக வேண்டும் என்பது.

“பினெகாஸ் தன் தேவனுக்காகப் பக்தி வைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவ நிவிர்த்தி செய்த படியினால், அவனுக்கும், அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக் கும் என்று சொல் என்றார்”. இங்கே, பினெகாசின் குறிப்பிட்ட இரண்டு காரியங்களுக்காக “நித்திய ஆசாரிய பட்டம்” என்கிறார். எலெயாசருடைய ஒரே மகன் என்கிற அடிப்படையில், இவன் இயல் பாகவே “பிரதான ஆசாரியன்” என்ற இடத்திற்கு வருவான். ஆயினும், இவன் செய்த சிறப்பான செயலினிமித்தம், ஏற்கனவே இருந்தது மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது. இங்கே சொல்லப்பட்டிருக்கும் “நித்தியம்” என்ற வார்த்தைக்கான பொருள் “நித்திய ஜீவன்”, “நித்திய ஆக்கினை” என்ற பொருளின்படியானதல்ல. ஏனெனில், அவைகள் ஒருபோதும் மாற்றம் பெறாமல் என்றென்றும் நிலைத்திப்பது. ஆனால், இது மாற்றத்திற்கு உட்பட்டது. அதாவது, மெல்கிசெதேக்கின் முறைமையின்படியான ஆசாரியர் வரும் வரை அப்படியே தொடரும் என்பதே (எபி. 7-ம் அதிகாரம்) இதன் பொருள்.

சரி, இங்கே நாம் “நித்தியம்” என்ற வார்த்தையை மாத்திரம் எடுத்துக் கொண்டு சில காரியங்களை ஆசீர்வாதத்திற்காகவும், சமாதா னத்திற்காகவும் கவனிப்போம். “நித்தியம்” என்பது, பிதா (சங். 90:2), குமாரன் (நீதி. 8:23) பரிசுத்த ஆவியானவர் (எபி. 9:14) ஆகியோ ருக்காகவும், அவர்களுடைய குணாதிசயங்களுக்காகவும் பயன்படுத் தப்படுகின்ற ஓர் உன்னத வார்த்தை. மனிதனுடைய வாழ்க்கை கொஞ்ச காலந்தோன்றிப் பின்பு இல்லாமற் போகிற புகையைப் போலிருந்தாலும் (யாக். 4:14). அவன் நித்திய ஜீவன் வரைக்கும் நிலைத்திருக்கிறவைகளுக்காகவே கிரியை நடப்பிக்க வேண்டும் (யோவா 6:26) என்று இயேசு கூறியுள்ளார்.

நித்தியம், அநித்தியம் என்ற வார்த்தைகளின் உண்மைப் பொரு ளைக் கனகச்சிதமாகப் புரிந்து கொண்ட மோசே தாசன், “அநித்திய மான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவ னுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்த

கொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும், கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" (எபி. 11:25,26). இந்த உண்மை தெரியாதபடியால் தான், உலகமும், ஏன் கிறிஸ்தவமும் ஆன்மீக நெறிகளில் வழிதப்பித் திரிந்து கொண்டிருக்கிறது. அப்போஸ்தலன் யோவான் கூறும் பொழுது, "நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் (1 யோவான் 2:25) என்று விளம்புகிறார். ஆனால், மெய்த் தேவன் மீதும், கிறிஸ்து மீதும் நம்பிக்கை வைக்கும் மிகப்பெரும்பாலோர், அநித்தியமான காரியங்களுக்காகவே நம்பிக்கை வைக்கின்றனர். இது குறித்து, பரிசுத்த ஆவியானவர் எப்படி எச்சரிக்கிறார் பாருங்கள். "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷர்களைக் காட்டிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" என்று (1 கொரி. 15:19)

அருமையானவர்களே, நாம் நித்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோமா அல்லது அநித்தியத்திற்கு, அதாவது இம்மைக்கு முக்கியத்துவம் தருகிறவர்களாக உள்ளோமா? எதற்கு? சொல்லுங்கள். நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும்படியாகவே தேவன் அவருடைய ஒரே பேறான குமாரனை பூமிக்கு அனுப்பிக் கொடுத்தார் (யோவா 3:16). ஆனால், கிறிஸ்தவ மாத இதழ்களும், கிறிஸ்தவத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் எதை மையப்படுத்தி எழுதுகிறது மற்றும் பேசுகிறது? ஏன், இந்த நிலை? கல்லறைதான் வாழ்க்கையின் முடிவு என்ற நிலைக்கு கிறிஸ்தவம் தாழ்ந்து விட்டதா? அல்லது பரலோகத்தை விட உலக வாழ்க்கையே மேல் என்ற கீழ் நிலைக்கு வந்து விட்டதா? என்ன தான் காரணம்?

ஒன்றை நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். நித்திய ஆசீர்வாதத்தை தேவன் பினெகாசுக்கு, அவன் ஆரோனின் பேரன் என்பதற்காகவோ அல்லது எலெயாசரின் மகன் என்பதற்காகவோ கொடுத்து விடவில்லை. மாறாக, பினெகாசின் தனிப்பட்ட வாழ்க்கையின் பக்தி வைராக்கியத்தினிமித்தமாகவும், அநேகருடைய பாவங்களை நிவிர்த்தி செய்ததினிமித்தமாகவுமே கொடுத்தார். அது போல நாமும் கிறிஸ்துவுக்காகவும், அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்காகவும், அவர் கட்டின ஒன்றான மெய்ச் சபைக்காகவும் பக்தி வைராக்கியம் காட்டி, பலருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கான பணிகளை மனமுவந்து செய்தால் மாத்திரமே நித்திய ஜீவனுக்குள் பிரவேசித்து என்றென்றும் அவருடன் வாழும் பாக்கியம் பெறுவோம்.

அன்பானவர்களே! இக்காரியத்தில், பினெகாஸ் காட்டின பக்தி வழியை நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற பரலோகத்தின் தேவன் நமக்கு உதவிச் செய்வாராக! ஆமென்!!

E.Z.S. இராஜநாயகம்

# நாம் ஏன் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறோம் ?

**நா**ன் என்ன செய்கிறேனோ அதை நான் ஏன் செய்கிறேன் என்று நீங்கள் நம்புவதற்கு என்னிடத்தில் நிச்சயமான காரணங்கள் உண்டு. அவைகளை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ள விரும்பு கிறேன். ஒருவேளை, நீங்கள் ஒரு விசுவாசியாக இல்லாவிட்டால், நீங்களும் என்னைப்போல் ஒரு விசுவாசியாக மாறும்படி அவை களை, உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நிச்சய மாகவே, என்னுடைய விசுவாசத்தில் நான் தனி ஒருவனாக இல்லை. உலக முழுவதிலும் கிறிஸ்துவுக்கும் என்னைப் போல் விசுவாசிகளாயிருக்கிற சகோதர, சகோதரிகள் உண்டு. நாங்கள் எல்லோரும் ஒரே தேவனை, ஒரே கிறிஸ்துவை, ஒரே ஆவியை விசுவாசிப்பதால் நாங்கள் ஒரே விதமான விசுவாசத்தைப் பெற்றி ருக்கிறோம். இவைகள் எல்லாமே வேதாகமத்தில் அடங்கியிருக் கிற தேவனுடைய வார்த்தைகளின் போதனைகளை அடிப்படை யாக கொண்டுள்ளது.

நம்முடைய பாடத்திற்கான இந்த வேளையில், பரிசுத்த ஆவியானவரை நாங்கள் ஏன் விசுவாசிக்கிறோம் என்பது பற்றியும், பரிசுத்த ஆவியானவரின் பணி பற்றியும் நாங்கள் உங்க ளுக்குச் சொல்லப்போகிறோம். பரிசுத்த ஆவியானவர் தேவத் துவத்தில் மூன்றாம் நபராயிருக்கிறார். பவுல் எபேசியர் 4:4-6 வசனங்களில் ஒரே தேவன், ஒரே கர்த்தர், ஒரே ஆவி என்று அறிவித்திருக்கிறார். பவுல் கிறிஸ்துவைப் பற்றி சொல்லும் போது இப்படியாகச் சொன்னார். “அந்தப்படியே நாம் இரு திறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்” (எபேசியர் 2:18). மறுபடி யும், தேவத்துவத்திலுள்ள மூவரும் தனித் தனியாகக் குறிப்பிடப் பட்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மத்தேயு 3:13-17 வசனங்களில் யோவான் ஸ்நானகளால் இயேசு ஞானஸ் நானம் பெறும் சம்பவம் விவரிக்கப்பட்டிருக்கிறது, அதை இப்போது வாசிக்கலாம்; “அப்போது யோவானால் ஞானஸ் நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தனுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்கு தடை செய்து; நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதா யிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமோ என்றான். இயேசு அவனுக் குப் பிரதியுத்தரமாக; இப்போது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறை வேற்றியது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார்.

அப்பொழுது, அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவியானவர் புறா வைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றி யும், வானத்திலிருந்து ஒரு சத்தரம் உண்டாகி; இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது". இந்த சம்பவத்தை கவனித்துப் பாருங்கள். கிறிஸ்து ஞானஸ் நானம் பெற்ற போது, பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல அவர் மேல் இறங்கி வந்தார். தேவன் தன்னுடைய குமாரனை அங்கேரித்ததன் வெளிப்பாடாக வானத்திலிருந்து பேசினார். அப்படியென்றால் நாம் தேவனை விசுவாசம் வைத்து, கிறிஸ்து வை அவருடைய குமாரன் என்று விசுவாசித்தால் பரிசுத்த ஆவி யானவரையும் நாம் விசுவாசிக்க வேண்டும். நாம் மறுபடியும் இப்படியாக வாசிக்கிறோம். "பரலோகத்திலே சாட்சியிடுகிறவர் கள் மூவர் பிதா, வார்த்தை பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்" (யோவான் 5:7). **இங்கே வார்த்தை என்பது கிறிஸ்துவைக் குறிக்கிறது (யோவான் 1:1)**

மரியாள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியாகி இயேசு வைப் பெற்றெடுத்தபடியால் நாங்கள் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறோம். நாம் மத்தேயு 1:18 ல் இப்படியாக வாசிக்கி றோம். இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது; அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டி ருக்கையில், அவர்கள் வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினா லே கர்ப்பவதியானாள் என்று. "கர்த்தருடைய தூதன் சொப்பணத் தில் யோசேப்புக்குக் காணப்பட்டு, உன் மனைவியாகிய மரியா ளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவனிடத்தில் உற்பத்தி யாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது என்றான்" (மத்தேயு 1:20). மரியாள் தேவதூதனை நோக்கி, இது எப்படி யாகும்? புருஷனை அறியேனே என்றார். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக; பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமான வருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது. தேவனுடைய குமாரன் என்னப்படும் (லூக்கா 1:35). வேறுவிதமாகச் சொன்னால், பரிசுத்த ஆவியின் கிரியையினால் தான் மரியாள் கர்ப்பவதியாக தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை முதலில் பெற்றெடுத்தாள்.

வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற வேத வாக்கியங் கள் எல்லாம் ஆவியின் சாட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது அல்லது அவைகள் எல்லாம் ஆவியின் வார்த்தைகளாயிருக் கிறது. எனவே, நாங்கள் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கி றோம். நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கும் மேலாக, ஆவியானவர்

பல்வேறுபட்ட தேவதாசர்களை மனிதனுக்கான தேவனுடைய சித்தத்தை எழுதும்படி ஏவினார். அதனால் தான் நாம் (1 தீமோத் தேயு 3:16, 17) வசனங்களில் இப்படியாக வாசிக்கிறோம். "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக் கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரி யையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத் தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது" என்று வார்த்தையானது ஆவியும், ஜீவனுமாயி ருக்கிறது; அது விடுதலையாக்குகிறது; (யோவான் 8:32) இது சத்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவின் காலத்திலும், அப்போஸ்தலர்களுடைய காலத்திலும் கிரியை செய்த விதத்தை வைத்து நாங்கள் பரிசுத்த ஆவியானவரையும், அவருடைய பணி யையும் விசுவாசிக்கிறோம். கிறிஸ்து அளவில்லாமல் ஆவியைப் பெற்றிருந்ததாக சொல்லப்படுகிறது. "தேவனால் அனுப்பப்பட்ட வர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக் குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்" (யோ வான் 3:34) இதன் பொருள், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுடன் வாசம் செய்தார் மற்றும் பரிசுத்த ஆவியை பயன்படுத்துவதற்கு கிறிஸ்துவுக்கு எல்லையேதும் இல்லை. அதாவது, பரிசுத்த ஆவி யானவரைக் கிறிஸ்து அளவில்லாமல் பெற்றிருந்தார் என்பதன் பொருள், மற்றவர்கள் பரிசுத்த ஆவியானவரை அளவுடன் தான் பெற்றிருந்தார்கள் என்று தெளிவாகிறது.

கிறிஸ்து தம்முடைய சீடர்களிடத்தில் ராஜ்யம் அல்லது சபை பலத்தோடே வரும் என்று வாக்குதத்தம் செய்திருந்தார் (மாற்கு 9:1). இது சபையானது பரிசுத்த ஆவியின் பலத்தோடே வரும் என்கின்ற உண்மையைத் தான் குறிக்கின்றது. பின்பு கிறிஸ்து சீடர்களிடத்தில் தேற்றதவானனை அனுப்புவதாக வாக்கு தத்தம் செய்திருந்தார். இயேசு விரைவில் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்வாரை அறிந்திருந்தார். மேலும், அப்போஸ்தலர்கள் மனிதர்களாக இருந்தபடியால் தவறு செய்வதற்கு வாய்ப்பு இருக் கிறது என்பதையும் அறிந்திருந்தார். ஆகவே, அவர் சொன்ன யாவற்றையும் அவர்களுக்கு நினைப்பூட்டும்படி பரிசுத்த ஆவி யானவரை அவர்களுக்கு அனுப்புவதாக வாக்குதத்தம் செய்தார். "சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள் ளும் அவர்களை நடத்துவார்" என்று அவர் அவர்களுக்கு அந்நிய அளவுகளில் பேசும் வல்லமையைக் கொடுப்பார், அற்புத அடை யாளங்கள் செய்யும் வல்லமையைக்

கொடுப்பார். யோவான் 15:26 ல் கிறிஸ்து சத்திய ஆவியானவரை தேற்றரவாளன் என்று குறிப்பிடுகிறார், யோவான் 16:13-ல், பரிசுத்த ஆவியானவரை சத்திய ஆவியானவர் என்று குறிப்பிடு கிறார். ஆகவே, பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலினால் எல்லா காரியங்களுமே சரியாக் செய்யப்பட்டு அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் வார்த்தை உறுதிப்படுத்தப்படும். இது கேட்கிறவர்களின் இருதயத்தில் விசுவாசத்தை உண்டாக்கும்.

கர்த்தருடைய மரணம், அடக்கம். உயிர்த்தெழுதலுக்குப் பின், பரலோகத்திலிருக்கிற தன் பிதாவினிடத்தில் திரும்பி செல்வ தற்கு சற்று நேரத்திற்கு முன்பு, அவர் தம்முடைய அப்போஸ்தலர் களைப் பார்த்து இப்படியாகச் சொன்னார். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது, நீங்கள் பெலனடைந்து, எருசலே மிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப். 1:8) என்று அதன் பின்பு அப். 2:1-4 வசனங்களில், நாம் இப்படியாக வாசிக் கிறோம் "பெந்தெகொஸ்தே என்னும் நான் வந்தபோது, அவர்க ளெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்தி லிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந் திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக் குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப் பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்". அங்கே வந்திருந்த ஜனங்கள் அப்போஸ்தலர்கள் தங்கள் மொழிகளில் பேசுவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். முதலில் இவர்கள் அப்போஸ்தலர்கள் குடித்திருந்ததாக நினைத்தார்கள். ஆனால் பேதுரு யோவேல் தீர்க்கதரிசியைக் கொண்டு இது கடைசி நாட்க ளில் மாம்சமான யாவர்மீதும் ஆவியை உளற்றுவேன் என்று உரைத்த தீர்க்கதரிசனத்தில் நிறைவேறுதல் என்று சொன்னார். அநேக அற்புதங்களும், அடையாளங்களும் அப்போஸ்தலர் களாலே செய்யப்பட்டது என்று வேதவசனம் சொல்கிறது (அப். 2:43). ஆனால், பரிசுத்த ஆவியின் வல்லமையை கர்த்தர் யாரிடத் தில் வாக்குதத்தம் செய்தார் என்று நாம் கவனிக்க வேண்டும். நிச்சயமாகவே, அப்போஸ்தலர்களிடத்தல் தான். ஆகையால் தான், அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றார்கள் அல்லது அவர்கள் இப்படிப்பட்ட அற்புத அடையாளங்களைச் செய்யும்படியாய் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார். இதன் விளைவாகவும், இவர்களால் பிரசங்கிக்கப் பட்ட சுவிசேஷத்தைக் கேட்டதின் விளைவாகவும் மூவாயிரம்

பேர் கர்த்தரில் விசுவாசம் வைத்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று கர்த்தருக்கு கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் இப்படிச் செய்ததி னால் கர்த்தர் அவர்களை இரட்சித்து பரிசுத்த ஆவியைக் கொடுத்து, சபையிலே சேர்த்துக் கொண்டார் (அப். 2:38, 40, 47).

ஆனால், அங்கே அப்போஸ்தலர்களால் தாங்கள் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் செய்ய முடியவில்லை. எனவே கர்த்தர் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் மீது அப்போஸ் தலர்கள் கைகளை வைக்கும்படி செய்தார். அதன் மூலம் அப்போஸ்தலர்கள் யார்மீது கைகளை வைத்தார்களோ அவர் களும் தேவனுடைய வார்த்தையை அறிவிக்கும்படி தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை மக்கள் நம்பும்படியாகப் பற்பல பாஷைகளில் பேசும் வல்லமையும், அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமையையும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது (அப். 6:1-8).

அப்போஸ்தலர்களும் அவர்கள் யார்மீது கைகளை வைத்தார்களோ அவர்களைத் தவிர மற்ற எல்லோரும் பரிசுத்த ஆவியின் குறிப்பிட்ட அளவைத்தான் பெற்றிருந்தார்கள். இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு அப். 10, 11 அதிகாரங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. கொர்நேலியும் அவன் வீட்டாரும், "புறஜாதிகள் கர்த்தராலும், யூதர்களாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டார்கள்" என்பதை நிரூபிக்கும்படியாக பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள்.

கடைசியாக, அப்போஸ்தலர்களும் அவர்கள் யார் மீது கைகளை வைத்தார்களோ அவர்களும் மரித்துப் போனார்கள். அதற்கு முன், பரிசுத்த ஆவியானவர் பல்வேறுபட்டவர்களை கர்த்தருடைய வார்த்தையை எழுதும்படி வழிநடத்தினார். அப்பொழுதிருந்து இன்று வரை தேவனுடைய வார்த்தையை படிப்பதினாலும், பிரசங்கிக்க கேட்பதினாலும் மனிதனுடைய இருதயத்தில் விசுவாசம் உண்டாகிறது. அதன்மூலம் கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்பட்டு, அற்புத அடையாளங்கள் செய்ய முடியாத பரிசுத்த ஆவியின் அளவைப் பெறுகிறார்கள். வார்த்தை உறுதிப்படுத்தப்பட்டு விட்டதால் பற்பல பாஷை களில் பேசுவது உட்பட, அற்புத அடையாளங்கள் இனித் தேவை யில்லை. ஆதலால், இன்று மனிதனிடத்தில் பரிசுத்த ஆவியான வர் அற்புத அடையாளங்கள் செய்யும் விதத்தில் கிரியை செய் வதில்லை. ஒருவர் தேவனுடைய வார்த்தைகளில் விவரிக்கப் பட்டிருக்கிற ஆவியின் வார்த்தையை விசுவாசியாவிட்டால், அவர்கள் ஓர் அற்புதத்தை கண்டால் கூட அதனால் அசைக்கப் படுவதில்லை.

ஆனால், பரிசுத்த ஆவியானவர் நமக்கு அற்புதங்களைச் செய்யும் வல்லமையை தராவிட்டால், நாம் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறோம் என்பதை எப்படி அறிந்து கொள்ள முடியும்? பரிசுத்த ஆவி நமக்குள் வாசம் செய்வதன் நோக்கம் என்ன? வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி பரிசுத்த ஆவியின் சாட்சியை நாம் விசுவாசிக்கிறோம். நாம் கர்த்தரை விசுவாசித்து அவருக்கு அதாவது அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும் போது, அவர் நம்மை இரட்சிக்கிறார், நமக்கு பரிசுத்த ஆவி தரப்படுகிறது (அப். 2:38). அதன்பின்பு, ஆவியானவர் தம்முடைய வார்த்தையைக் கொண்டு நம்மை வழி நடத்துகிறார் (ரோமர் 8:1). நாம் தேவனுடைய பிள்ளைகளா யிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார் (ரோமர் 8:16) என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆவியானவர் தாமே நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:26) ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார் (எபேசியர் 1:14). மேலும், தேவனுடைய வார்த்தை ஆவியின் பட்டயமாயிருக்கிறது (எபேசியர் 6:17)

அநேக கள்ள ஆவிகள் உண்டு. ஆனால் தேவனுடைய மெய்யான ஆவி பரிசுத்த ஆவிதான். நீங்கள் அப்படிப்பட்ட பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறீர்களா? அவர் உங்களுக்குள் வாசம் செய்கிறாரா? அந்த ஆவியை நீங்கள் பெற்றிரா விட்டால் நீங்கள் தேவனுடையவர்களல்ல.

நீங்கள் கர்த்தரை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும் போது கர்த்தர் உங்களை இரட்சித்து, பரிசுத்த ஆவியைத் தந்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். நீங்கள் இவைகளை ஏற்கனவே செய்யவில்லை என்றால் நீங்கள் அப்படிச் செய்யும்படி நாங்கள் ஜெபிக்கிறோம்.

**J.C. சோட்**

## கிறிஸ்தவ உபதேசம்

| | |
|---|---|
| தேவனுடைய வார்த்தை மட்டுமே | (வெளிப்படுத்தல் 22:18,19) |
| புதிய ஏற்பாடு | (எபிரெயர் 9:15) |
| சுவிசேஷம் | (ரோமர் 1:16; கலாத்தியர் 1:6-9) |
| மனிதக் கோட்பாடுகள் அல்ல | (மாற்கு 7:7) |

பெண்கள் பகுதி

# குடும்பம் பற்றிய தேவ திட்டம்

பிரியமானவர்களே ! குடும்பம் என்பது தேவனுடைய திட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றது. இரண்டு நிலையான ஸ்தாபனங்கள் தேவ திட்டத்தில் உருவானது. ஒன்று குடும்பம், இரண்டாவது சபை.

தேவன் தனது அன்பின் வெளிப்பாடாக ஏதேன் தோட்டத்தில் ஆதாமையும், ஏற்ற துணையாக ஏவாளையும் உருவாக்கினார். மனிதன் தனிமையாய் இருக்கக்கூடாது என்பதை தேவன் அறிந்து கணவன், மனைவி என்ற அர்த்தத்தோடு குடும்பத்தை நடத்தும் சிலாக்கியத்தை கொடுத்திருக்கிறார். திருமணத்தின் நோக்கமே பலுகி பெருக்குவதுதான். தேவன் ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாளிடம் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்றார். பிள்ளைகள் கர்த்தரால் கிடைக்கும் சுதந்திரம் என்று (சங். 127:3) வாசிக்கிறோம்.

கணவன்தான் குடும்பத்தை ஆளும் பொறுப்பை உடையவன். ஆதாம் ஆளும் பொறுப்பை தேவனால் பெற்றான். (ஆதி 3:16) மனைவியை ஆளுபவன் கணவன். (ஆதி. 3:16) புருஷன் மனைவிக்கு தலையாயிருக்கிறான் (எபே. 5:23). ஸ்திரீக்கு (எல்லா பெண்களுக்கும்) ஆண் தலையாயிருக்கிறான் (1 கொரி. 11:3) அநேக ஆண்கள் பொறுப்பை தட்டி கழிக்கிறார்கள். இது தேவ திட்டத்துக்கு விரோதமானது. கணவன் தன் மனைவியில் அன்பு கூர வேண்டும். இது தேவனுடைய கட்டளை. கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்தது போல கணவன் மனைவியில் அன்பு கூர வேண்டும். கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்ததினால் தம் உயிரையே கொடுத்து சபையை சம்பாதித்தார். அதுபோல கணவனும், மனைவிக்கு தன் உயிரையே கொடுக்கும் அளவு அன்பு கூர வேண்டும் (எபே. 5:28-33).

கணவனும், மனைவியும் ஒரே மாம்சமாய் இருக்கிறார்கள். ஏதோ சரீரத்தில் இருவரும் ஒன்றாக இணைவது என்ற அர்த்தத்தை விட அதிகமான அர்த்தத்தை இது உள்ளடக்கியுள்ளது (எபே. 5:31). இருவருடைய குணாதிசயங்களும் ஒன்றாக இணைவது, இருவரும் சேர்ந்து ஆராதனை செய்ய வேண்டும். சேர்ந்து அழ வேண்டும். சிரிக்கும் போது சேர்ந்து சிரிக்க வேண்டும், மகிழ்ச்சியான நேரங்களை சேர்ந்து கழிக்க வேண்டும், துக்கங்களை சேர்ந்து பகிர்ந்து கொள்ளல் வேண்டும், சேர்ந்து வேலை செய்ய வேண்டும், சேர்ந்து விளையாட வேண்டும், உன்னுடையது, என்னுடையது என்ற வார்த்தைகள் சேர்ந்து நம்முடையது என்று

மாற வேண்டும். நம் வருமானம், நம் வீடு, நம் குடும்பங்கள், நம் பணம், நம் தோழர்கள், நம் வேதாகம வகுப்பு என்று பேசக் கற்றுக்கொள்ள வேண்டும். 1 தீமோ 5:8 ன் படியாக தன் சொந்த வீட்டை விசாரிக்கிறவனாக கணவன் இருக்க வேண்டும்.

அந்தப்படி மனைவிகளுக்கென்றும் தேவன் வகுத்த திட்டங்கள் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அதை அப்படியே கடைபிடிக்க வேண்டும். “சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்த காரியத்திலேயேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்” (எபே 5:24) ஏன்? இவ்வாறு சொல்கிறார் என்றால், கிறிஸ்து ஒரு போதும் சபைக்கு நல்லதல்லாத செயலை செய்ததே இல்லை. அதைப்போலவே கணவனும், தன் மனைவிக்கு நன்மையான காரியங்களை மாத்திரம் செய்ய வேண்டும். எனவே எக்காரணத்தைக் கொண்டும் மனைவி கணவனுக்கு விரோதமான செயலை செய்யவே கூடாது.

மனைவிகள், சாராள் தன் கணவன் ஆபிரகாமை ஆண்டவனே என்று சொல்லி கீழ்ப்படிந்திருந்தது போல இக்காலத்து ஸ்திரீகளும் கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருக்க வேண்டும். “புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு” (நீதி 19:14) என்று வாசிக்கிறோம்.

மேலும் மனைவிகள் தங்கள் கணவனில் அன்பு கூறுகிறவர்களாய் இருக்க வேண்டும். கணவன், மனைவி இருவருமே அன்பு செலுத்த கற்றுக் கொள்ள வேண்டும். மனைவிகள் தங்கள் பிள்ளைகளில் அன்பு கூர வேண்டும். பிள்ளைகள் கர்த்தரால் கிடைத்த சுதந்திரம் என்று எண்ண வேண்டுமே தவிர அவர்களை பாரமாக எண்ணக்கூடாது. எவ்வளவு முயற்சி எடுத்து தன் பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக பாடுபடுகிறாளோ அதுதான் அவள் பிள்ளைகள் மேல் காட்டும் அன்பு. இவள் காட்டும் அன்பும், பயிற்சியும்தான் பிள்ளைகளின் எதிர்காலத்தை நிச்சயிக்கிறது. சாந்தமும், பரிசுத்தமும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். தேவ வசனம் தூஷிக்கப்பட நாம் இடம் கொடுக்க கூடாது. புறம்பான அலங்கரிப்பை விரும்பாமல் சாந்தமும், அமைதியும் உடைய இருதயமாகிய உள்ளான அலங்காரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

குணசாலியான ஸ்திரீயைப் பற்றிய விளக்கம் நீதி 31 ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. வேத வசனம் கொடுக்கும் விளக்கத்தை புரிந்து குடும்பத்தை நடத்தும் போதுதான் தேவன் தம் திட்டத்தில் கீழ் ஏற்படுத்திய குடும்பம் போல் இருக்கும். இல்லாவிட்டால் பிரிவினைகள், சண்டைகள், இதன் விளைவாக பாதிக்கப்படும் குழந்தைகள் என்று பிரச்சனை நிறைந்த வாழ்க்கையாகவே இப்பூமியின் வாழ்க்கை மாறி விடும்.

கணவனும், மனைவியும் சேர்ந்து பிள்ளைகளை வளர்ப்பதில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும். "பிள்ளை வளர்ப்பு" என்பது மிகப்பெரிய வேலை. வேதவசனம் கூறுகிற ஆலோசனையின்படி பிள்ளைகளை வளர்க்க வேண்டும்.

அருமையானவர்களே, இந்தப்படி கணவன், மனைவி, பிள்ளை வளர்ப்பு ஆகிய காரியங்களில் வசனம் சொல்கிறபடி பங்குகளை ஆற்றினோமானால் நிச்சயமாக வெற்றியுள்ள கிறிஸ்தவ குடும்பத்தை நடத்தலாம். அதை விட தேவன் ஏற்படுத்திய குடும்பத்தின் இலக்கணம் நிறைவேற நாமும் பாடுபட்டோம் என்று நிம்மதி பெருமூச்சு விடலாம்.

வேதத்தை வாசியுங்கள், தியானியுங்கள். அப்படி செய்யத் துவங்குவோம். ஆமென்.

- ரேச்சல் ராஜநாயகம்

## தேவனுக்கான ஆராதனை

| | |
|---|---|
| ஆவியோடும், உண்மையோடும் | (யோவான் 4:24) |
| வாரத்தின் முதல் நாள்தோறும் | (அப். நடபடிகள் 20:7) |
| கர்த்தருடைய பந்தியோடு | (1கொரிந்தியர் 11:20-29) |
| பாடலோடு | (எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16) |
| காணிக்கையோடு | (1கொரியந்தியர் 16:1-2) |
| ஜெபித்தலோடு | (அப். நடபடிகள் 2:42; 1 கொரி. 14:15) |
| பிரசங்கித்தலோடு | (அப். நடபடிகள் 20:7) |

## கிறிஸ்தவனின் பணி

இழந்து போன உலகத்திற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுதல் (மாற்கு 16:15)

விழுந்து போன கிறிஸ்தவர்களை மீட்டுக்கொள்ளுதல் (யாக்கோபு 5:19,20)

தேவனுடைய வார்த்தையை கற்றுக் கொள்ளுதல் (II தீமோத்தேயு 2:15)

ஏழைகளுக்கு உதவுதல் (கலாத்தியர் 6:10)

வாலிபர் பகுதி

## என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்

வாலிப பருவத்தில் உலகத்தாருடைய பாவங்களை சிலுவையில் சுமந்து, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் வெற்றி வீரராக உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். தாயின் கருவறையிலிருந்து கல்லறைக்கு நாம் போய் சேருமட்டும் பல பருவங்களை கடந்து செல்கிறோம். அப்படி கடந்து போகும் பருவத்தில் மிக முக்கியமான பருவம் தான் வாலிப பருவம். இந்த வாலிப பருவமே ஒருவனுடைய எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கிறது. இந்த பருவத்தில் அநேகர் தவறான முடிவுகளை எடுத்து பிற்காலங்களில் பல துன்பங்கள் அடைந்து கவலையோடு மரித்து போய் இருக்கிறார்கள்.

நாமும் பிற்காலங்களில் இப்படி துன்பப்பட்டு மரிப்பதை விட இந்த வாலிப பருவத்தில் வேதாகமத்தின் அடிப்படையில் சில முடிவுகளை எடுத்து நாம் வாழ்கின்ற போது எதிர்கால வாழ்க்கை நமக்கு சிறப்பானதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அப்படி வேத வசனத்தின்படி இந்த வாலிப பருவத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் போது நாம் முதிர் வயதிலும் நிச்சயமாக கிறிஸ்துவுக்கு கனி கொடுக்க முடியும்.

நம்முடைய வாலிப பிராயத்திலே நம்மை சீரழிக்கும் பங்கு அதிகமாக நம்முடைய சரீர இச்சையினாலேயேதான் வருகிறது. பிற்பாடு நம்முடைய ஆவியையும் அடக்காதே போகும் போது நாம் முழு பாவத்தையும் ஈடுபாடுடன் செய்து நம்முடைய எதிர்கால ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்கும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் நமக்கு நாமே சமாதி கட்டி விடுகிறோம். இதைக் குறித்து இக்கட்டுரையின் மூலம் எப்படி இக்காரியத்தை மேற்கொள்வது என்பதை கற்றுக் கொள்வோம்.

### 1. சரீரத்தை அடக்கி ஆள வேண்டும்

மனிதனாக பிறந்த ஒவ்வொருவருடைய சரீரமும் மண்ணினாலே ஆனது. ஆனால், இந்த மண்ணான சரீரத்தை நம்மால் அநேக வேளைகளில் அடக்கி ஆள முடிவதில்லை, வாலிபர்களே, நீங்கள் நன்றாக யோசித்து பாருங்கள் "நம்முடைய பெரும்பாலான எல்லா பாவங்களும் நம்முடைய சரீரத்தை மையமாக வைத்தே சுற்றி வருகிறது" என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

ஏதேன் தோட்டத்தில் ஏவாளும் ஆதாமும் விழுந்து போனதற்கு முதலாவது காரணம் என்னவென்று பார்த்தால் அது மாம்ச இச்சையே என்பது நன்றாக விளங்கும். சாத்தான் பாவம் செய்ய ஏவாளை தூண்டி விட்ட உடன் அவள் அந்த நன்மை தீமை அறியதக்க கனியை பார்த்த போது முதலாவது அவளுக்கு ஏற்பட்ட எண்ணம் "புசிப்புக்கு நல்லது" (ஆதி 3:6) என்று நினைத்தாள். நாமும் கூட இந்த ஆதாம் ஏவாளை போல அநேக வேளைகளில் சரீரத்தை கீழ்ப்படுத்த முடியாமல்

விழுந்து போய் விடுகிறோம். நாம் சொல்வதை சரீரம் கேட்க வேண்டும். ஆனால், அநேக நேரங்களில் சரீரத்தின் உத்தரவுகளுக்காக நாம் காத்து அடிமைகளை போல வாழ்கிறோம்.

தேவனால் முதன் முதலாக படைக்கப்பட்ட மனுஷர்களாகிய ஆதாம், ஏவாளே மாம்ச இச்சைகளை கீழ்ப்படுத்த முடியவில்லை, நான் எப்படி மேற்கொள்ளுவது? என்று கேள்வி கேட்க ஆரம்பிக்கிறோம். ஆனால், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மாம்சத்தில் இருந்த நாட்களில் பிசாசினால் சோதிக்கப்பட்ட போது மாம்ச இச்சைகளை தேவனுடைய வசனத்தை மேற்கோள்காட்டி எளிதாக ஜெயித்திருக்கிறார் (மத். 4:3,4) என்பதையும் நாம் மறந்து போய் விடக்கூடாது.

வாலிபர்களே, "நீங்கள் எதற்கு கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள்" (ரோமர் 6:16) என்று பவுல் எச்சரிக்கிறார். நீங்கள் மாம்ச இச்சைக்கோ அல்லது கண்களின் இச்சைக்கோ கீழ்ப்படியும் போது அதற்கு நீங்கள் அடிமைகள் என்பதை மறந்து போய் விடாதீர்கள். ஆகையால் நீங்கள் ஒரு போதும் பிசாசுக்கு அடிமையாக மாறி விடக்கூடாது.

**நான் என் மாம்சத்தின் இச்சைகளை என்னை விட்டு விலக்க வேண்டு மென்றால் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறீர்களா? அதற்கான பதிலை அப்போஸ்தலனாகிய பவுலே சொல்கிறார்** "மற்ற வர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" (1கொரி. 9:27) என்று அறிவுரை கூறுகிறார். எனவே நாம் நம்முடைய சரீரத்தை நமக்கு கீழ்ப்படுத்த வேண்டும். சரீரம் சொல்ல கூடிய பாவ காரியத்திற்கெல்லாம் நாம் செவி கொடுக்க கூடாது. நாம் என்ன சொல்லுகிறோமோ அதைத்தான் சரீரம் கேட்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் அடுத்ததாக கூறும் அறிவுரை என்னவென்றால் "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலா 5:24) என்கிறார். அருமையான வாலிப சகோதரர்களே நீங்களும் இதை போல் இருந்தால் தான் பிரகாசமான கிறிஸ்தவ ர்களாக வாழ முடியும். நாமும் நம்முடைய ஆசை இச்சைகளை யெல்லாம் சிலுவையில் அறைய வேண்டும். அந்த மாம்சத்தின் இச்சைகளை சிலுவையில் அறைந்து சாகடித்து விடுங்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்துகிறார்.

மேலும், "பவுல் கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்" (கலா. 6:17) என்று எழுதுகிறார். அதேபோல் நாமும் கிறிஸ்துவின் அச்சடையாளங்களை நம் சரீரத்தில் தரித்துக் கொள்ள வேண்டும். நம்முடைய ஒவ்வொரு செயல்பாட்டிலும் எல்லா ஜனங்களும் நம்முடைய சரீரத்தில் கிறிஸ்துவை பார்க்க வேண்டும்.

## 2. ஆவியை அடக்கி ஆள வேண்டும்

வாலிபர்களாகிய உங்களுக்கு பரிசுத்த ஆவியானவர் தமது வசனத்தின் மூலமாக கொடுக்கும் ஆலோசனை ஆவியை (மனுஷ

ஆவி) அடக்கி ஆள வேண்டும் என்பதாகும். ஏவாளும், ஆதாமும் ஆவியை அடக்காததினால் தான் உலகமே இருளுக்குள் போய் விட்டது பாருங்கள். பிசாசினால் சோதிக்கப்பட்ட உடன் அவர்கள் நன்மை தீமை அறியதக்க கனியை பார்த்த போது "கண்களை தெளி விக்கிறது" (ஆதி. 3:6) என்று தங்கள் உள்ளத்திலே நினைத்தவர்களாக அதைப்புசித்தார்கள், தங்களுடைய ஆவியிலே இருவரும் தாங்கள் நன்மை தீமை அறிய வேண்டும் என்றும் தேவர்களைப் போல மாற வேண்டும் என்றும் நினைத்தார்கள். ஏனென்றால், ஆவியை அடக்க அவர்களால் முடியவில்லை விளைவு நன்மை தீமையை அறிந்தகி னாலே பாவமும், பாவத்தினாலே மரணத்தையும் இந்த உலகத்திற்கு கொடுத்து என்றென்றும் அழியாத நினைவுச் சின்னங்களாக இருக்கி றார்கள்.

அருமையான வாலிபர்களே! அன்றைக்கு அவர்கள் பிசாசினால் சோதிக்கப்பட்டபோது தங்கள் ஆவியை அடக்காததி னால் மிகப்பெரிய விளைவுகளை மனித குலம் இன்றைக்கும் சந்திக் கிறது. அதனால்தான் இன்றைக்கு நம்முடைய பரிசுத்த வேதாகமம் "மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. அது உள்ளத் தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்" (நீதி. 20:27) என்று கூறுகிறது. நீங்கள் எந்த காரியம் செய்தாலும் அது தேவனுக்கு பிரியமாக இருக்குமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படி பார்க்காத பட்சத்தில் நாம் நிச்சயமாக தேவனுடைய கிருபையிலி ருந்து விழுந்து போய் விடுவோம்.

இன்றைக்கு நீங்கள் உலகத்தை பாருங்கள், பெரும்பாலான வாலிபர் கள் குடிப்பழக்கத்திற்கும், புகைபிடிக்கும் பழக்கத்திற்கும், போதை வஸ்துகளுக்கும், விபச்சாரத்திற்கும், வேசித்தனத்திற்கும் அடிமைகளாக இருப்பதை நீங்கள் பார்க்க முடியும், இவர்கள் தங்கள் ஆவியினாலே உள்ளத்தை ஆராயவில்லை. அதனால் இதிலிருந்து மீளமுடியாமல் அடிமைப் பட்டு கிடக்கிறார்கள். இவர்களை குறித்து நீதி மொழிகளின் ஆசிரியர் "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்" (நீதி. 25:28) என்று வேதனையோடு எழுதுகிறார். அதே போல் நீங்களும் உங்கள் ஆவியை அடக்கி ஆளவில்லையென்றால் உங்கள் இருதயமெல்லாம் துன்மார்க்கத்தில் நிறைந்து இருக்கும் (மத். 7:21-23) என்று கிறிஸ்து எச்சரிக்கிறார்.

நம்முடைய ஆவியில் ஒவ்வொரு நாளும் நாம் அதிகமதிகமாக பலப்பட வேண்டும். அதற்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்து கொள்ள வேண்டும் (எபே. 6:11-18) என்று பவுல் வலியுறுத் துகிறார். ஆகையால், கிறிஸ்துவுக்கு பிரியமான வாலிபர்களே! நீங்கள் உங்கள் சரீரத்தையும் ஆவியையும் அடக்கி கீழ்ப்படுத்துங்கள், அப்போது உங்கள் சரீரபிரகாரமான வாழ்க்கையும் ஆவிக்குரிய வாழ்க்கையும் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதாகமாக அமையும். உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் கிறிஸ்து வரும் போது குற்றமற்றதாய் காக்கப் படுவதாக. ஆமென்.

**N. பர்னபாஸ்**




# முன்மாதிரி

அன்பான தம்பி, தங்கைகளே! நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். வளரும் பருவத்தில் இருக்கும் நீங்கள் யாரையாவது ஒருவரை உங்கள் கண்முன் வைத்து அவரைப்போலவே செய்வீர் களானால் எதிர்காலத்தில் ஒரு சிறந்த கிறிஸ்தவ சகோதரனாக, சகோதரியாக நீங்கள் வளரலாம்.

அப்படியானால் யாரை மாதிரியாக வைப்பது? என்ற கேள்வி எழுகிறதல்லவா? இதற்கு என்ன பதில் என்பதை தெரிந்து கொள்ள வேதாகமத்திற்குள் செல்லலாம். ஒரு குழந்தை பின்பற்று வதற்கு சிறந்த உதாரணமாக இயேசு இருக்கிறார். "... தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரி யைப் பின்வைத்து போனார்" (1 பேதுரு 2:21) என்று வாசிக்கி றோம்.

இயேசுவானவர் வளர்ந்தது போல ஞானத்தில் வளர வேண்டும். ஞானம் என்பது புரிந்து கொள்ளுதலுடன் கூடிய அறிவு. வளர்த்தியிலும் (சரீர சம்பந்தமானது), தேவ கிருபை யிலும் (ஆவிக்குரிய காரியங்கள்) மனுஷர் தயவிலும் (சமுதாய சம்பந்தமானது) (லூக்கா 2:52) வளர வேண்டும். இவை எல்லா வற்றிலும் மிக முக்கியம் வாய்ந்தது ஆவிக்குரிய வளர்ச்சி. இது, ஞானத்தைக் காட்டிலும் மேலானது. "கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (சங். 111:10). சரீர முயற்சி அற்ப பிரயோ ஜனமுள்ளது (சரீர சம்பந்தமானது) (1தீமோ. 4:8). மனிதர் தயவு வேண்டியதுதான், ஆனால் மனிதரை பிரியப்படுத்தக்கூடாது. மனுஷரா, தேவனா என்று பார்க்கும் பொழுது நாம் தேவனைப் பிரியப்படுத்தும் காரியங்களைத்தான் முதலில் செய்ய வேண்டும் (கலா. 1:10)

சரி. அடுத்தது சிறுபிள்ளைகளாகிய நீங்கள் தீமோத்தேயு வைப் போல் வளர வேண்டும். தீமோத்தேயுவின் தகப்பன் ஒரு கிரேக்கன் (அப். 16:1-3). அவன் தாய் ஒரு யூதஸ்திரீ (அப். 16:1). அவன் பிறந்த குழந்தையாயிருந்த காலத்திலிருந்தே வேத வசனங்கள் அவனுக்கு கற்றுத் தரப்பட்டது.

குழந்தைகளாய் இருக்கிற உங்களுக்கு தேவை வேத வசனங்கள். ஏனென்றால் பின் நாளில் அது உங்களை இரட்சிப்புக் குள்ளாக வழிநடத்துகிறது. தேவனுடைய மனுஷனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் வேத வசனங்கள் கொடுக்கக் கூடியதாய் இருக்கிறது.

தம்பி, தங்கைகளே! தீமோத்தேயு உங்களைப்போல் சிறு வயதுள்ளவனாய் இருக்கும்போதே வேத எழுத்துக்களை அறிந்து இருந்தான் (2 தீமோ. 3:15). அவன் பெரிய மனுஷனாகி தேறின தேவ மனுஷனாக வாழ்ந்ததற்கு அது உதவியாய் இருந்தது.

எனவே, இயேசு கிறிஸ்துவையும், தீமோத்தேயையும் உங்கள் கண்களுக்கு முன்பாக எப்போதும் வைத்து அவர்களைப் போல் வளர்வீர்களானால் பிரயோஜனமான பாத்திரங்களாக மாறுவீர்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அப்படி வளர தேவன் உதவி செய்வாராக! ஆமென்!

*மனப்பாட வசனம் :* இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். (லூக்கா 2:52).

**R. ஏபில் ரோஜர் நாயகம்**

## மனிதனை இரட்சிப்பதற்கு தேவனுடைய திட்டம்

| | |
|---|---|
| **தேவனுடைய கிருபை** | **- எபேசியர் 2:8** |
| **கிறிஸ்துவின் இரத்தம்** | **- ரோமர் 5:9** |
| **பரிசுத்த ஆவியானவரின் வார்த்தை** | **- (II தீமோத்தேயு 3:16,17)** |
| **பாவியின் விசுவாசம்** | **- அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:31** |
| **பாவியின் அறிக்கை** | **- ரோமர் 10:10** |
| **பாவியின் ஞானஸ்நானம்** | **- (I பேதுரு 3:21)** |
| **கிறிதவனின் கிரியை** | **- யாக்கோபு 2:24** |
| **கிறிஸ்தவனின் நம்பிக்கை** | **- (ரோமர் 8:24)** |
| **கிறிஸ்தவனின் விசுவாச உறுதி** | **- (மத்தேயு 24:13)** |

“ துருவின் சாட்சி ” நூலில் இருந்து

பாடம் - 4 (சென்ற மாதத் தொடர்ச்சி)

# பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல்

## III. நம்முடைய பொக்கிஷங்களைப் பற்றி நம் ஆண்டவரின் புத்திமதி

1. இயேசு பூச்சி கெடுத்துப் போடும் பொருள்களை மனிதர்கள் தவிர்க்க வேண்டும் என்று சொல்கிறார். கிழக்கத்திய நாடுகளில் மனிதனுடைய செல்வத்தின் ஒரு பகுதியாக அருமையான விஸ்திரமான நீண்ட உடைகள் கருதப்படும். எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி நாகமானிடமிருந்து மறுக்கப்பட்டதைப் பெற்றுக்கொள்ள விரும்பின போது, அதாவது தன்னுடைய எஜமான், நாகமானை குணப்படுத்தின பிறகு, கேயாசி நாகமானிடம், ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்று வஸ்திரங்களையும் கேட்டு இருந்தான். II ராஜாக்கள் 5:22. ஆகான், பாவம் செய்ய காரணமாயிருந்தவைகளுள் நேர்த்தியான பாபிலோனிய வஸ்திரமும் இருந்தது (யோசுவா 7:21). எளிதில் அழிந்து போகக் கூடிய பொருள்களில் சிந்தையை வைப்பது அவர்களுக்கும் மதியீனமாயிருந்தது, அதைப் போலவே நமக்கும் மதியீனமாயிருக்கிறது.

2. இயேசு, துரு அழிக்கக்கூடிய பொருள்களைத் தவிர்க்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொன்னார். துரு என்கிற பதமானது தின்று போடுதல் என்கிற அர்த்தத்தைக் கொடுக்கிறது. கிழக்கத்திய நாடுகளில் ஒரு மனிதனுடைய செல்வம் அவன் களஞ்சியங்களில் சேர்த்து வைத்த தானியங்களை உள்ளடக்கியது. ஆனால், அந்த தானியங்களை பூச்சியானது தின்று போடும். அதைப் போலவே எலிகளும், சுண்டெலிகளும் படையெடுத்து வந்து அந்த களஞ்சியம் கெட்டுப் போகும் வரைக்கும், அழிக்கப்படும் வரைக்கும் வேலையைக் காட்டும். நிலையானதென்று எதையும் சொல்ல முடியாது.

3. இயேசு, திருடர்கள் கன்னமிட்டு திருடுகிற பொருள்களைத் தவிர்க்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொன்னார். பாலஸ்தீன தேசத்தில் பெரும்பாலான வீடுகளின் சுவர்கள் களிமண்ணால் கட்டப்பட்டிருக்கும். திருடர்கள் அடிக்கடி அந்த சுவர்களை நோண்டி அதை உடைத்துப் போட்டு உள்ளே சென்று திருடிச் செல்வார்கள். இங்கே காரியம் என்னவென்றால், ஒரு மனிதன் தன்னுடைய வீட்டில் சேர்த்து வைத்த பொன் போன்ற பொக்கிஷங்

களை விட்டுவிட்டு ஒரு நாள் வெளியூருக்குச் சென்று விட்டு மறுபடியும் திரும்பி வந்து காண்பதற்கு முன் திருடர்கள் அந்த சுவர்களை இடித்து பொக்கிஷங்களை எடுத்துச் செல்வார்கள். நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்தக் கால கட்டத்திலும் நம்முடைய பொக்கிஷங்கள் எல்லாம் திருடர்களுக்குட்பட்டதேயாகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

யூத மார்க்கத்திற்கு மனமாற்றம் அடைந்த மோனோபாஸ் என்கின்ற ராஜாவைப் பற்றி ஒரு கதை உண்டு. மோனோபாஸ் ராஜா பஞ்சத்தின் போது தன்னுடைய பொக்கிஷங்களை எல்லாம் ஏழைகளுக்கு தான தர்மம் பண்ணினார். அப்போது அவருடைய சகோதரர்கள் அவரைப் பார்த்து "உம்முடைய பிதாக்கள் அவர்களுடைய பிதாக்களைக் காட்டிலும் அதிகமான பொக்கிஷங்களைச் சேர்த்தனர். ஆனால், நீயோ உன்னுடையதையும், அவர்களுடைய தையும் தொலைத்து விட்டாய்" என்று சொன்னார்கள். அப்போது ராஜா அவர்களை நோக்கி, "என் பிதாக்கள் என்னைக் காட்டிலும் குறைவாகத்தான் பொக்கிஷங்களைச் சேர்த்தனர். அவர்கள் மனித கை ஆட்சி செயயும் இடத்தில் தான் பொக்கிஷங்களைச் சேர்த்தனர். ஆனால், நானோ மனித கை ஆட்சி செயயாத இடத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன்; மேலும், என் பிதாக்கள் வட்டி கொடுக்காத பொக்கிஷங்களைத் தான் சேர்த்து வைத்திருக்கிறேன்; என் தகப்பன் பணத்தினாலான பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தார். நானோ ஆத்துமாக்களில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன்; என் தகப்பன் இந்த உலகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தார்; நானோ வருகின்ற உலகத்திற்காக பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறேன்" என்றார்.

## IV. பாதுகாப்பான முதலீடு

என்னுடைய வாழ்க்கையில் நான் எந்த லாபத்தொகையும் தராத பல முதலீடுகளை செய்திருக்கிறேன். ஒரு முறை ஒரு லட்சம் கடனாகப் பெற்று ஒரு வியாபாரத்தில் போட்டேன். ஆனால், ஒவ்வொரு சிறு தொகையையும் இழந்து விட்டேன். கடந்த பத்து ஆண்டுகளில் ஐந்து காப்பீட்டு நிறுவனங்களில் உள்ள பங்குகளை வாங்கியிருந்தேன். ஆனால், இன்று அந்த பங்குகள் எல்லாம் இறங்கு முகத்தில் உள்ளது. என்னைப்பார்த்து சிலர், நான் ஒரு நல்ல வியாபாரி அல்ல என்று சொல்கிறார்கள். இல்லை நான் ஒரு நல்ல வியாபாரிதான். ஏனென்றால், அதிலிருந்து நான் அநேக பாடங்களைக் கற்றுக் கொண்டதால் இப்போது நான் பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறேன். இப்போது அந்தப் பணத்தில் நான் வாழ்கின்ற நாளிலும் பல மடங்காகப் பெற்றுக் கொண்டிருக்கிறேன். எனவே, உங்கள் பொக்கிஷம் பாதுகாப்பாக

இருக்க வேண்டுமென்றால், அவைகளை பரலோகத்தில் சேர்த்து வையுங்கள். மத்தேயு 19:27-29 "அப்பொழுது பேதுரு அவரை நோக்கி; இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான்; அதற்கு இயேசு மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது என்னைப் பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரெண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வான்" என்றார். நான் பரலோகம் செல்ல விரும்புவதற்கு அநேக காரணங்கள் உண்டு. அவைகளுள் ஒன்று, என்னுடைய பொக்கிஷங்களை காண வேண்டும் என்பதாகும். "அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய ஜீவகிரீடம் பரலோகத்தில் உங்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறதா?" (Iபேது. 1:4) பரலோகத்தில் சேர்த்து வைக்கும் பொக்கிஷங்கள் தான் மெய்யானதும், பாதுகாப்பானதாகவும் இருக்கிறது.

## V. பொக்கிஷங்களின் வல்லமை

பொக்கிஷங்களுக்கு மனிதனின் இருதயத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமை உள்ளது. இந்த உண்மை, இயேசுவை விட வேறு யாருக்கும் சிறந்த முறையில் தெரியாது. இதன் காரணமாகத்தான் இயேசு இப்படியாகச் சொன்னார். "ஒரு மனிதனுடைய பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே அவன் இருதயமும் இருக்கும்" என்று பொக்கிஷம் ஒருவருடைய இருதயத்தைப் பின் தொடர்வதில்லை. மாறாக, இருதயம் தான் பொக்கிஷங்களைப் பின் தொடர்கிறது என்பதைக் கவனியுங்கள்.

ஒரு சகோதரன் சேமித்துப் பதுக்கி வைத்த பணத்தை பூமிக்குரியவைகளில் முதலீடு செய்து சபைக்கோ, கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கோ, மற்ற நற்கிரியைகளுக்கோ உதவி செய்யாவிட்டால் இந்த மனிதனுக்குப் பரலோகில் பொக்கிஷம் இல்லாததால், பரலோகத்தைப் பற்றிய அக்கறை ஏதுமிருக்காது.

நான் பொருளாதார வீழ்ச்சியின் போது அலபாமாவில் உள்ள ஒரு பண்ணை வீட்டில் வளர்க்கப்பட்டேன். எங்களிடம் சில மாடுகள் இருந்தது. அவைகளுள் ஒன்று (புல்வெளியின் பின்புறத்தில்) கன்றுக்குட்டியை ஈன்றெடுக்கும்போது, மாட்டை அதன் தொழுவத்திற்கு நாங்கள் அழைத்துச் செல்ல வேண்டிய

தாயிருந்தது. அப்போது, நான் சீக்கிரமாக மாட்டை தொழுவத்திற்கு அழைத்துச் செல்ல கற்றுக் கொண்டேன். நான் கன்றுக் குட்டியை (மாட்டின் பொக்கிஷத்தை) மாட்டின் முன் எடுத்துச் செல்வேன். மாடு அப்போது அதன் பின் செல்லும். தேவன் உண்டாக்கின எல்லாமே அதன் பொக்கிஷத்தை பின் தொடரும். ஒரு மனிதன் பரலோகத்தில் பொக்கிஷத்தை சேர்த்து வைக்கவில்லையென்றால் அதில் அவன் விருப்பமாயிருப்பது முடியாத காரியம். சகோதரனே, சகோதரியே நீங்கள் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறீர்களா? கடைசி மட்டும் காலதாமதம் செய்ய வேண்டும். இன்றே தொடங்குங்கள். இந்த தலைமுறையிலேயே இந்த உலகத்தில் சுவிசேஷம் அறிவிப்பதற்கு நம்மிடம் தேவையான செல்வம் இருக்கிறது.

**(தொடரும்)**

## சபையின் ஆளுகை அமைப்பு

தனித்தனி உள்ளூர் சபைகள் [அப். நடபடிகள் 14:23]

மூப்பர்களால் ஆளுகை செய்யப்படுகிறது
[தீத்து 1:5-9; எபிரெயர் 13:7]

உதவிக்காரர்களால் ஊழியம் செய்யப்படுகிறது
[1தீமோத்தேயு 3:8-13]

போதகர்களால் போதிக்கப்படுகிறது
[எபிரெயர் 5:12-14]

பிரசங்கியார்களால் போதிக்கப்படுகிறது
[ரோமர் 10:13-15]

அங்கத்தினர்களால் பணி செய்யப்படுகிறது
[ரோமர் 12:4-8].

இயேசு கிறிஸ்துவுக்கு கடமைப்பட்டிருக்கிறது
[1 பேதுரு 5:1-4]

# ஆவிக்குரிய வாழ்விற்கான அளவுகோலை ஏற்படுத்துகிறது யார்?

கடந்த வருடம் டென்வரிலிருந்து அட்லாண்டாவுக்கும், பின்பு ஜெர்மனியில் உள்ள முனிச்சிக்கும், யுக்ரைனுக்கும் இரண்டு முறை பயணம் செய்தேன். ஒவ்வொரு முறையும் விமானத்தை உயர பறக்கச் செய்வதற்கும், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கும், சரியான இடத்தில் தரை இறக்குவ தற்கும் விமான ஓட்டுநர் விமானக் கருவிகளை துல்லியமாக வும், ஜாக்கிரதையாகவும் கணக்கிடும் திறமையைப் பார்த்து நான் தொடர்ந்து ஆச்சர்யப்பட்டேன். இந்தப் பகுதியை நான் அதிக மாக பாராட்டுகிறேன். மேற்கூறப்பட்ட பயணங்கள் அல்லாமல் மேலும் சில பயணங்களை சமீப மாதங்களில் மேற்கொண்டிருக் கிறேன். அமெரிக்காவிலிருந்து கானாவுக்கும், எத்தியோப்பியா வுக்கும் இந்தியாவுக்கும், சிங்கப்பூருக்கும் விமானத்தில் பறந்து மறுபடியும் நாட்டுக்கு திரும்பினேன். விமான ஓட்டுநரின் சம யோஜித புத்தியும், துல்லியமாக கணக்கிடும் திறனும் ஒரே மாதிரி யாகத்தான் இருக்கிறது.

எனக்குத் தெரிந்தவரை விமானத்தை மேற்சொல்லப்பட்ட தன்மையில் ஓட்டுவதற்கு விமானக்கருவி விதி அவசியப்படு கிறது. இந்த விதிகள் தான் விமானம் பறப்பதையும், எந்த திசை யில் அது செல்ல வேண்டும் என்பதையும் கருவி மூலமாக ஒழுங்குபடுத்துகிறது. அடிப்படையாக இந்த விதி விமான ஓட்டுநர் அந்த கருவியின் இயக்கத்தை நம்புவதை எந்த அளவுக்கு கற்றுக் கொள்கிறாரோ அந்த அளவுக்கு வெற்றி பெறும். ஏனென்றால் சில வேளைகளில் மேகங்கள், மழை, பனி போன்றவைகள் விமான ஓட்டியின் பார்வை திறனை மங்கச் செய்யலாம். அப்படிப்பட்ட வேளைகளில் அந்த விமான ஓட்டுநர் இந்த கருவியின் இயக்கத்தை வைத்து தான் விமானத் தை ஓட்ட முடியும். இப்படிப்பட்ட நேரத்தில் விமான ஓட்டுநர் தன் பார்வை திறனை அல்லது உணர்வுகளை நம்பியோ பறக்க முடியாது. மாறாக விமானக்கருவி காட்டும் திசையை நோக்கி தான் பறக்க முடியும். விமான ஓட்டுநர் வேறு வழியாக பயணத் தை தொடரலாம் என்று கூட உணரலாம். ஆனாலும், விமானக் கருவி விதி என்ன அளவு கோலை வைத்திருக்கிறதோ அதை நம்பினால் அல்லது சார்ந்திருந்தால் மட்டுமே விமானத்தை பாதுகாப்பாக உயர பறக்கச் செய்வதற்கும், தரையிறக்குவதற்கும் முடியும்.

மத சம்மந்தமாக பேசும்போது மேற்சொல்லப்பட்ட விதி ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. எல்லோரும் இல்லா விட்டா லும் அநேகர் தங்கள் பாதையை இயக்க தங்கள் உணர்வுகளை நம்பும் போது அதன் விளைவாக தேவனுடைய வார்த்தையின் அளவுகோலிலிருந்து வழிவிலகிச் சென்று விடுகிறார்கள்.

மதசம்மந்தமாக ஒருவர் உணர்வுப்பூர்வமாக வழி நடத்தப்படும் போது ஒருவர் எதை நம்ப விரும்புகிறாரோ, எதைச் செய்ய விரும்புகிறாரோ அதை தேவன் ஏற்றுக் கொண்டார் என்று நியாயப்படுத்த வழிவகுக்கும். இதன் இறுதி விளைவு மனித இனம் தேவனுடைய அளவுகோலுக்கு சவால்விடுவதாக இருக்கும். உபதேசம் என்பது இரட்சிப்பு சம்மந்தமான விஷயமாக இல்லாமல் அபிப்பிராய சம்மந்தமான விஷயமாக மாறிவிடும்.

ஒரு காரியத்தை, அன்பாக அதே நேரத்தில் தைரியமாகச் சொல்ல விரும்புகிறேன், தேவன் எங்கெல்லாம் போதனைகளை வழங்கி இருக்கிறாரோ எல்லா இடத்திலும் இரட்சிப்பு சம்மந்த மான விஷயம் இருக்கிறது. மனித இனம் ஒன்றை விரும்பவில்லை என்பதற்காக அது இல்லாமல் போய்விடாது. விவாகம், விவாகரத்து, மறுவிவாகம் போன்றவைகளுக்கு தேவன் ஏன் ஒரு அளவுகோலை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதற்காக, மனித இனத்தில் பெரும் பகுதி அவருடைய திட்டத்தை கெடுத்துப்போட்டு விட்டது என்ப தற்காக தேவன் தாம் ஏற்படுத்தின அளவுகோலில் மாற்றம் செய்வார் என்று பொருள்படாது. இது, இசைக்கருவிகளை பயன் படுத்துதல், ஆயிர வருட அரசாட்சிக்கொள்கை, நம் குடும்பத் திற்கான நம்முடைய பொறுப்புகள், அரசாங்கத்திற்கான நம்மு டைய பொறுப்புகள், தேவனுக்கான நம்முடைய பொறுப்புகள் போன்றவைகளுக்கும் பொருந்தும்.

தேவனுடைய நினைவுகளும், வழிகளும் நம்முடையவைகள் போன்றது அல்லது என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும், (ஏசாயா 55:8-9). நாம் அதை புரிந்து கொள்ளாமல் போனாலும் கூட அது மாறாது !

தேவனால் ஏற்படுத்தப்பட்ட அளவுகோலானது நம் தெரிந்து கொள்ளுதலை எதிர்பார்க்கிறது. அதற்கு நம்மை நாம் ஒப்புக் கொடுக்கவும் முடியும். அதனால் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப் படவும் முடியும். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் தெரிந்து கொள்ளும் திறனை தந்திருக்கிறார். நம் தெரிந்து கொள்ளுதல் இரட்சிப்பின் விஷயமாகக் காணப்படுகிறது. நான் அன்பில்லாத வனாக, தயையில்லாதவனாக இருக்க முயற்சி செய்யவில்லை என்று உங்களுக்கு தெரியும் என நம்புகிறேன். உண்மையாக சொல்லப்போனால் மேற்சொல்லப்பட்டவைகளுக்கு எதிர்ப்பதம் தான் உண்மை. நாம் எல்லோரும் பரலோகம் போக வேண்டும் என்பதற்காகத்தான் இந்த காரியங்களை எல்லாம் பேசுகிறேன். பரலோகம் போக ஒரே வழி தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற அளவுகோல் என்பது எனக்குத் தெரியும்.

உங்கள் சொந்த ஜீவியத்திற்காகவும், உங்களுடைய நெருக்கமானவர்களுடைய ஜீவியங்களுக்காவும் மேற்சொல்லப் பட்ட காரியங்களுக்காகவும், அதன் முக்கியத்துவத்திற்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக !

**BOB TURNER** **BENNY MARTIN**

# இயேசுவும், சிலுவையும்

உலகம் முழுவதுமுள்ள இழந்து போனவர்களின் இரட்சிப்பு இயேசுவையும், அவருடைய சிலுவையையும் மையமாக கொண்டுள்ளது. அவருடைய தியாகம் மனிதனை கடந்த 2000 ஆண்டுகளாகத் தேவன் பக்கமாக இழுத்து வந்துள்ளது. சிலுவையில் அறையப்படுவதற்கு முன், கிறிஸ்து அவமானமான முறையில் நடத்தப்பட்டார். உலக இரட்சகர் இயேசு தன்னுடைய விரோதிகளால் சவுக்கால் அடிக்கப்பட்டு, போர்ச் சேவகரால் துன்புறுத்தப்பட்டு பரிகசிக்கப்பட்டார். எதிரிகள் அவர் மீது உமிழ்ந்து, அதன்பிறகு சிலுவையில் அறைய அவர் கொண்டு போகப் பட்டார். சிலுவை மரணத்தை மத்தேயு இவ்விதமாக குறிப்பிட்டுள்ளார். "அவரை சிலுவையில் அறைந்த பின்பு அவர்கள் சீட்டுப் போட்டு அவருடைய வஸ்திரங்களை பங்கிட்டுக் கொண்டார்கள்.... அவர்கள் உட்கார்ந்து அவரைக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்". (மத். 27:35,36) சில மணி நேர பாடுகளுக்குப் பிறகு இயேசு கொல்கதாவில் தன் உயிரை விட்டார்.

## சிலுவை - ஒரு அடையாளம்

கிறிஸ்துவின் பேருண்மைகளை சிலுவை அடையாளப்படுத்துகிறது. முதலாவது, இந்த அடையாளம் பாவத்தின் ஆழத்தை சுட்டிக்காட்டுகிறது. பாவத்தின் விளைவை, சிதைந்து போன குடும்பங்களிலும், பயங்கர பகையுணர்விலும், ஒருவருடைய உரிமையை மற்றவர் பரித்துக்கொள்கிற கொடூரச் செயல்களிலும் நாம் காணலாம். ஆனால் இயேசுவின் சிலுவை மரணம் பாவத்தை அதன் உண்மைத் தன்மையோடு மனிதனுக்கு காட்டும் தேவனின் மாபெரும் முயற்சியாகும். ஒரு சமயம், மறைந்த "லியோ போல்ஸ்" என்பவர் "இயேசுவை சிலுவையிலறைந்த பாவம்" என்ற தலைப்பில் பிரசங்கிப்பதை நான் கேட்டேன். அவர் அறியாமையான பாவம் என்பதிலிருந்து தொடங்கி விரோதம், பொறாமை, திருட்டு, பொய், பண ஆசை, ஒழுக்கக்கேடு ஆகிய பல பாவங்கள் பற்றிப் பேசினார். அந்தப் பிரசங்கித்தில் போல்ஸ் அவர்கள் நீதி தவறுதலைக் குறித்துப் பேசும் போது, பிலாத்தைக் குறிப்பிட்டார். "தான் என்ன செய்ய வேண்டும் என்பது தெரிந்தும் அதைச் செய்ய முடியாத அளவு பெலவீனமாயிருந்தான்". அவன் உறுதியாகச் செயல்பட்டிருக்கலாம். ஆனால், தனக்கு கனத்தைக் கொடுக்கும் கொள்கைகளை காற்றில் பறக்கவிட்டுவிட்டு ஒழுக்க ரீதியில் ஒரு கோழையாக நடந்து கொண்டான்.

## இரக்கத்தின் அகலம்

தேவனுடைய அளவு கடந்த இரக்கத்திற்கு கிறிஸ்துவின் சிலுவை ஒரு அடையாளம். இயேசு கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் வல்லமை எல்லோருக்கும் கிடைக்கிறது. தீமை தண்டிக்கப்பட வேண்டுமென நீதி நீடிக்கிறது. ஆனால், கிறிஸ்துவின் மரணம் மூலமாக தேவன் மனிதனுக்கு இரக்கத்தை நீட்டிக் கொடுத்துள்ளார். ஒரு பாவி தன்னுடைய பாவத்திற்கு தண்டனையைப் பெற்றுக் கொள்வதற்கு பதிலாக, அவன் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கீழே சொல்லப்படும் சம்பவம் மேதியர், பெர்சியராலே கொடுக்கப்பட்டது. மேதியர், பெர்சியர் இவர்களின் சட்டங்கள் மாற்றத் தக்கதல்ல. மாத்திரமல்ல அவைகளின் தண்டனைக்கு தப்பித்துக் கொள்ளவும் முடியாது. இச்சட்டத்தில் கண்ணுக்கு கண்ணும், பல்லுக்கு பல்லும் கேட்கப்படும். ஒரு சமயம் ஒரு இளைஞன் தன்னைச் சேர்ந்த ஒருவனின்

கண்களை கெடுத்துப் போட்டான். அவனுடைய குற்றத்திற்கு தண்டனையாக, அந்த இளைஞனின் கண்கள் பிடுங்கப்பட வேண்டுமென சட்டம் சொல்லிற்று.

அந்த இளம் குற்றவாளி, விசாரணைக்காக நீதிபதியின் முன்னால் கொண்டுவரப்பட்டான். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவனின் சொந்த தகப்பன் நீதிபதியாக இருக்க நேர்ந்து விட்டது. அங்கே நீதி மற்றும் இரக்கம் இவ்விரண்டின் முரண்பாடான அழுகையின் சத்தம் நீதிபதியின் செவிகளில் ஒலித்தது. நீதிபதி மகனை நேசித்தார். கூடவே நாட்டின் சட்டத்தையும் மதித்தான். தவறு செய்தவன் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் அன்பையும் தனது இரக்கத்தையும் காட்ட வேண்டும். நீண்ட சிந்தனைக்குப் பிறகு நீதிபதி தன் மகனைப் பார்த்து இவ்விதம் சொன்னான். உன்னுடைய நீதிபதி என்ற முறையில் நீ அழித்த இரண்டு கண்களுக்கு பதிலாக உனது இரண்டு கண்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தின் தண்டனையை நான் விதித்தாக வேண்டும். சட்டம் சொல்வதற்கு குறைவாக நான் விதிக்க முடியாது. ஆனால், உனது தகப்பன் என்ற முறையில் நீதியை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டு என்னுடைய கண்களில் ஒன்றைத் தருகிறேன் என்று. இந்த வகையான இரக்கத்தின் பாடத்தைக் குறித்து பவுல் சொல்லியுள்ளார். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். சிலுவை மனிதனுக்கான தேவ அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

## இரட்சிப்பின் வல்லமை

மனிதனுடைய இரட்சிப்பின் வல்லமையை சிலுவை அடையாளப்படுத்துகிறது சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது (1கொரி. 1:18). கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக மனிதன் தேவனிடம் ஒப்புரவாகிறான்.

விவாகரத்தைப் பெற்றுக் கொண்ட ஒரு கணவனும், மனைவியும் மரிக்கும் தருவாயிலிருந்த தங்களது குழந்தையின் படுக்கையின் இருபுறமும் நின்றிருந்ததாக ஓர் உண்மைச் சம்பவம் உண்டு. அந்த குழந்தை ஒரு கையினால் தனது தந்தை யின் கரத்தைப் பற்றியிருந்தது இன்னொரு கரத்தால், தாயின் கைகளைக் கெட்டியாகப் பிடித்திருந்த இந்நிலையில் அந்தக் குழந்தையின் உயிர் பிரிந்தது. ஆவி தன்னை தந்த தேவனிடத்திற்குத் திரும்பியது. பரஸ்பர அன்பில் ஒன்றாக்கப்பட்ட பிஞ்சுக் கரங்களால் கிட்டிச் சேர்க்கப்பட்ட கணவனும் மனைவியும் ஒன்று சேர்க்கப்பட்டார்களென்றும், ஒரு முறிந்து போன குடும்பம் ஒன்றானது என்றும் அது சொல்கிறது.

கொல்கொதாவில் தேவகுமாரன், தனது ஒரு கரத்தை பரலோகத்திற்குள்ளாக நீட்டி தேவனை பிடித்துக்கொண்டார். மற்றொரு கரத்தை உலகத்திற்கு நேராக நீட்டி மனிதனின் இருதயத்தை தொட்டுள்ளார். அதன் மூலம், சிலுவையில் தொங்கின கிறிஸ்து, மனிதன் தேவனோடு ஒப்புரவாக வேண்டுமெனக் கேட்கிறார். நமது இரட்சகர் மரித்த சிலுவை மரம் சாதாரணமானது என்று எண்ண வேண்டாம். சிலுவை ஒரு மகத்தான பாடத்தைக் கற்பிக்கிறது. யோவான் அப்போஸ்தலன் தனது நூலில் சிலுவையின் மேன்மையை ஒரு வசனத்தில் திரட்டி கொடுத்துள்ளார். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவா 3:16).

**WILLARD COLLINS**

## "கிருபையுள்ள வார்த்தை" தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : சகோ. பிலேமோன் ராஜா, மதுரை.

| | | | |
|---|---|---|---|
| Z தமிழ் | TV | வெள்ளி | காலை 5:30 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |

## "கிறிஸ்துவின் வசனம்" தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : சகோ. அர்ச்சுனன், வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| இமயம் | TV | புதன் | காலை 6:30 மணி |



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Thursday Sunday | 6.45 - 7.00 a.m. | Box. 3815 New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sundays, Mondays, Tuesdays, Thursdays, | 2.00 - 2.15 p.m. | Box. 80 Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Mondays, Tuesdays, Thursdays, Fridays, | 5.30 - 5.45 p.m. | Box. 8405 Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Fridays | 3.45 - 4.00 p.m. | Box. 5540 Thiruvananthapuram - 695 034. | P.K. Varghese |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# திருமறை ஆசான்

இதழ் ஆசிரியரின்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| இமயம் | TV | வியாழன் | காலை | 6:00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Koval Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.